# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/= | இதழ் - 42 | 01.11.2023





கம்புப் பயிச்செய்கையும் அதன் நன்மைகளும் **06**

மாற்றம் ஒன்றே மாறாதது **12**

வெற்றிக்கு வழிவகுக்கும் தெளிவான சிந்தனைகள் **18**

# 7 நாடுகளுக்கு இலவச விசா


தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04



# 7 நாடுகளுக்கு இலவச விசா

## அதிகரிக்குமா சுற்றுலாவிகள் வருகை?

- பவித்திரன் -

ஏழு நாடுகளின் பிரஜைகளுக்கு இலவசமாக விசாவை வழங்குவதென்ற தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் எடுத்திருப்பதன் மூலமாக உல்லாசப் பயணிகளின் வருகைகளைப் பத்து வீதத்தினால் அதிகரிக்கக்கூடியதாக இருக்கும் என இலங்கை ஹொட்டல்கள் சங்கத்தின் (Hotels Association of Sri Lanka) தலைவர் எம்.சாந்திக்குமார் தெரிவித்திருக்கின்றார். அரசாங்கத்தின் இந்தத் திட்டத்தின் மூலமாக இந்தியாவிலிருந்து அதிகளவுக்கு உல்லாசப் பயணிகள் வருவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இந்தியா உள்ளிட்ட ஏழு நாடுகளுக்கு இலவசமான விசாச் சுற்றுப் பயணத்துக்கு இலங்கை அமைச்சரவை கடந்த வாரம் ஒப்புதல் அளித்து உள்ளது. இந்த நடைமுறை உடனடியாக நடப்புக்கு வருவதாகவும் 2024ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதி வரை இலங்கைக்குள் நுழைய இந்த ஏழு நாடுகளைச் சேர்ந்தோருக்கு விசா இலவசமாக வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. உல்லாசப் பயணிகளை அதிகளவுக்குக் கொண்டுவருவதை இலக்காகக் கொண்டே இந்த சலுகையை குறுகிய காலத்துக்கு நடைமுறைப்படுத்த விருப்பதாக அரசாங்கம் அறிவித்தது. இது ஒரு பரீட்சார்த்த நடவடிக்கை எனவும் தெரிவிக்கப்பட்டது.

### பத்து வீதம் அதிகரிக்கும்

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை வரவேற்றுள்ள ஹொட்டல்கள் சங்கத்தின் தலைவர் சாந்திகுமார், இதன்மூலமாக உல்லாசப் பயணிகளின் வருகையை குறைந்த பட்சம் பத்து வீதத்தினால் அதிகரிக்கக்கூடியதாக இருக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் இது தொடர்பில் கருத்து



வெளியிட்ட சாந்திகுமார், "அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை இந்தியாவிலிருந்து வரக்கூடிய உல்லாசப் பயணிகளை அதிகளவுக்குக் கவர்வதாகவும், அதன் மூலம் அதிகளவு உல்லாசப் பயணிகள் வருவதற்கு வழிவகுப்பதாகவும் இருக்கும்" எனத் தெரிவித்தார்.

"சென்னையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் இந்திய உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையும் இதன் மூலமாக கணிசமாக அதிகரிக்கலாம்" என்றும் குறிப்பிட்ட சாந்திகுமார், "விசாவை இலவசமாக வழங்குவதன் மூலமாக நாட்டுக்கு கணிசமான இழப்பு ஏற்பட்டாலும் கூட, இது அதிகளவு உல்லாசப் பயணிகளைக் கவர்வதாக இருக்கும் என்பதால் அதன்மூலம் கிடைக்கக்கூடிய வருமானம், விசாவை இலவசமாக வழங்குவதன் மூலமாக வரக்கூடிய இழப்பை ஈடுசெய்வதற்குப் போதுமானதாக இருக்கும்" என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்தியா, சீனா, ரஷ்யா, மலேசியா, ஜப்பான், இந்தோனேஷியா மற்றும் தாய்லாந்து ஆகிய 7 நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு விசா கட்டணத்தைத் தள்ளுபடி செய்ய அனுமதி வழங்குமாறு சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ விடுத்த கோரிக்கைக்கு அமைச்சரவை திங்கட்கிழமை ஒப்புதல் அளித்தது. இது மார்ச் 31, 2024 வரை முன்னோடித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். இலவச விசா சுற்றுலா விசாவின் நோக்கம் இலங்கைக்கு அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதாகவும், இந்த ஏழு நாடுகளில் இருந்துமே அதிக எண்ணிக்கையிலான பயணிகள் வருவதாகவும் சுற்றுலா அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

### ஒரு மில்லியன் சுற்றுலாவிகள்

கடந்த வாரம், இலங்கை ஒரு மில்லி



யன் சுற்றுலாப் பயணிகளின் வருகையைப் பதிவுசெய்தது, 2023 ஆம் ஆண்டில் 1.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என்ற இலக்கைக்கு மேலதிகமாக, இவ்வருடத்தில் 1.7 மில்லியன் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையை எதிர்கொள்ள சுற்றுலாத் தொழில்துறை தயாராக உள்ளது என்பதை இது வெளிப்படுத்துகின்றது. பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள இலங்கைக்கு இது உண்மையில் வரவேற்கத்தக்க ஒரு முன்னேற்றம்தான்.

ஆனால், “இலவச விசாவை வழங்குவதன் மூலமாக மட்டும் அதிகளவான உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுக்க முடியாது” எனக் குறிப்பிடும் உல்லாசப் பயணிகள் ஹொட்டல் முகாமையாளர் ஒருவர், “குறிப்பிட்ட ஏழு நாடுகளிலிருந்தும் அதிகளவான உல்லாசப் பயணிகள் வருவார்கள் என்பதால், அதிகளவு விமானங்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டிய தேவை இருக்கின்றது” என்பதையும் சுட்டிக்காட்டுகின்றார். “அதிகளவுக்கு பட்ஜெட் விமானங்களைச் சேவையில் ஈடுபடுத்துவது பயனுள்ளதாக இருக்கும்” என்றும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இதேவேளையில் உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரிக்கும் நிலையில், பலாலியிலுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை இருப்பதும், அதிகளவு விமானங்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டிய அவசியமும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. இந்த இரண்டு விடயத்துக்கும் சாதகமான பதில் கிடைத்திருக்கின்றது.

### பலாலி அபிவிருத்தி

முதலாவதாக பலாலி விமான நிலைய உள் கட்டமைப்பு வேலைகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்திருக்கின்றார். இரண்டாவதாக, தற்போது இடம்பெறும் “அலையன்ஸ் எயர்லைன்ஸ்” விமான சேவைக்கு மேலதிகமாக “இன்டிகோ” விமானத்தையும் சேவையில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் சேவைகளும் விரைவில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் பலாலி விமான நிலையத்தைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை எதிர்காலத்தில் கணிசமாக அதிகரிக்கும்.

தற்போதுள்ள நிலையில் பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதையை சுமார் அரை கிலோ மீட்டர் தூரத்துக்கு விரிவுபடுத்தினாலே அதிக பயணிகளை ஏற்றிச் செல்லத்தக்க பெரிய விமானங்கள் வந்து செல்ல முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. தற்போது அலையன்ஸ் விமானத்தில் 60 பயணிகள் மட்டுமே பயணம் செய்ய முடியும். பெரும்பாலான நாள்களில் ஆசனங்கள் அனைத்தும் நிரம்பிய நிலையில்தான் விமானப் பயணம் இடம்பெறுகின்றது.

இன்டிகோ யாழ். – சென்னை பயணத்தில் இணைவது இந்த நெருக்கடியை கொஞ்சம் குறைக்கும். ஆனால், யாழ்ப்பாண விமான சேவைக்கு தாம் தயாராக இருப்பதாக இன்டிகோ உறுதிப்படுத்தியுள்ள போதிலும், அது எப்போது இணைந்து கொள்ளும் என்பது தெரியவில்லை. இந்தச் சேவை ஆரம்பமாகும் போது, விமானப் பயணக் கட்டணமும் குறைவடைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பையும் யாழ். – சென்னை பயணத்தைக் கிரமமாக மேற்கொள்ளும் ஒருவர் தெரிவித்தார்.

### இமேஜை உயர்த்துமா?

இந்த பொருளாதார நன்மைகளுக்கு மேலதிகமாக, இலவச விசா சுற்றுலா வசதி இலங்கையை ஒரு சுற்றுலாத் தலமாக மேம்படுத்துவதற்கும் வெளிநாடுகளில் நாட்டின் இமேஜை மேம்படுத்துவதற்கும் உதவும். இது சுற்றுலாத் துறை மற்றும் பொருளாதாரத்தின் பிற துறைகளில் முதலீடுகளை அதிகரிக்க வழிவகுக்கும்.

உலகச் சுற்றுலா அமைப்பின் ஆய்வின் படி, சுற்றுலாவுக்காக செலவிடப்படும் ஒவ்வொரு 1 மில்லியன் டொலரும் 11 வேலைகளை உருவாக்குகிறது. எனவே, இலங்கைக்கான இலவச விசாச் சுற்றுலாவின்

பலாலி விமான நிலைய உள்கட்டமைப்பு வேலைகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சா“ நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்திருக்கின்றா“. தற்போது இடம்பெறும் அலையன்ஸ் எயர்லைன்ஸ் விமான சேவைக்கு மேலதிகமாக இன்டிகோ விமானமும் யாழ் - சென்னை சேவையில் ஈடுபடவுள்ளது. இதன் மூலம் பலாலி விமான நிலையத்தைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம். இந்தியப் பயணிகளும் அதிகளவுக்கு வரலாம்...

பொருளாதார நன்மைகள் குறிப்பிடத்தக்கதாக இருக்கலாம். குறிப்பாக அதிக வேலை வாய்ப்புக்களை உருவாக்க இது உதவும்.

இலவச விசா வசதி வழங்கப்பட்ட இந்த ஏழு நாடுகள் 2023 இன் முதல் ஒன்பது மாதங்களில் மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 40 வீதத்தை பதிவு செய்துள்ளன. 2018 இல் அவர்களின் பங்களிப்பு (இலங்கை சுற்றுலாவின் கடைசி சாதாரண ஆண்டு) 36% ஆகும்.

சுற்றுலாத் துறையானது வரலாற்று ரீதியாக இலங்கையின் அந்நிய செலாவணி வருவாயில் ஒரு முக்கிய பங்கைக் கொண்டுள்ளது மற்றும் பொருளாதாரத்தின் இன்றியமையாத உந்துதலாகவும் உள்ளது மற்றும் மிகவும் சவாலான நான்கு வருட காலப்பகுதியைத் தொடர்ந்து, சுற்றுலாத் துறை இப்போது மீட்சிக்கான பாதையில் உள்ளது.

எவ்வாறாயினும், இலவச வீசா சுற்றுலா இலங்கையின் பொருளாதார பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. நிலையான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு அதிக பணவீக்கம், அரசாங்க கடன் மற்றும் ஊழல் போன்ற பிற பிரச்சினைகளை நாடு தீர்க்க வேண்டும்.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

## உயரும் விலைவாசி!

பாரிய பொருளாதார நெருக்கடி ஒன்றுக்குள் இலங்கை சிக்கித் தவிக்கும் நிலையில், வாழ்க்கைச் செலவினம் ஜெட் வேகத்தில் அதிகரித்துச் செல்வது மக்களைப் பெரும் நெருக் கடிக்குள்ளாக்கியுள்ளது.

உணவு, எரிபொருள், மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்துள்ளன. பணவீக்கம் வரலாறு காணாத உச்சத்தை எட்டியுள்ளது. மக்கள் தமது அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செல்வது கடினமாகி வருகிறது. வருமான மட்டம் அதே அளவில் இருக்கும் நிலையில், வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்கின்றது.

வெளிக் காரணிகளைவிட, அரசாங்கங்களின் தவறான பொருளாதாரக் கொள்கைகளும், ஊழல்களும் பொருளாதார நெருக்கடிக்குப் பங்களிப்பைச் செய்திருக்கின்றன. இலங்கை பெருமளவிலான வெளிநாட்டுக் கடனைக் குவித்துள்ளது. இது உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதியளிக்கப் பயன்படுத்தப்பட் டது. அவற்றில் பல வெள்ளை யானைகள். அரசாங்கம் ஒரு பட்ஜெட் பற்றாக்குறையை எப்போதுமே எதிர்கொள்கின்றது. இதற்குப் பணத்தை அச்சடிப்பதன் மூலம் நிதியளிக்கப்படும் நடைமுறையைத்தான் அரசு கையாண்டது. ரூபாவின் கடுமையான வீழ்ச்சிக்கும் பணவீக்கம் அதிகரிப்பதற்கும் இது வழிவகுத்தது.

வாழ்க்கைச் செலவு மக்களின் வாழ்வில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மக்கள் அடிப்படைத் தேவைகளுக் குப் போராடுகிறார்கள், பலர் வறுமையில் தள்ளப்படுகிறார்கள். மக்களிடம் போதிய பணம் இல்லாமையால் வர்த்தகச் செயற்பாடுக ளும் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளன.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுக்கு தீர்வு காண அர சாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு குறுகிய கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் தேவை. குறுகிய காலத்தில், அன்றாட வாழ்க்கைக்கு சிரமப்படும் குடும்பங்கள் மற்றும் வர்த் தகர்களுக்கு அரசு உதவி வழங்க வேண்டும். வரி குறைப்புகள், தள்ளுபடிகள் மற்றும் பிற வகையான சமூகப் பாதுகாப்பு செயற்பாடுகள் மூலம் இதைச் செய்யலாம்.

நீண்ட கால அடிப்படையில், பொருளாதாரத்தை மேம்படுத்த கட்டமைப்புச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். இதில் கடனைக் குறைத்தல், பட்ஜெட் பற்றாக்குறையைக் குறைத் தல், பொதுத்துறையின் செயல்திறனை மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும். முதலீடு செய்வதற்கும் சாதகமான சூழலை உருவாக்க வேண்டும்.

விவசாயிகள், உற்பத்தியாளர்களுக்கு மானியம் வழங்குவ தன் மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்தை அதிகரிக்கலாம். அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகளை குறைப்பதும் அவசியம். மக்களுக்குத் தேவைப் படும் திறன்களை வளர்க்க கல்வி மற்றும் பயிற்சியில் முதலீடு செய்ய வேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், அன்றாட வாழ்க்கைக்கு சிரமப்படும் மக்களின் சுமையை குறைக்க அரசாங்கம் உதவலாம்.

# அன்புள்ள ஆசிரியருக்கு...



### இந்தியக் கப்பல் சேவை

கடந்த வாரத் தமிழர் பொருண்மியம் வார இதழில் வெளிவந்த "இந்தியா வுடனான கப்பல் சேவை வாய்ப்புகளும் சவால்களும்" என்ற கட்டுரை சிறப்பானதாகவும் பயனுள்ள தகவல்களைத் தருவதாகவும் இருந்தது. இந்தக் கப்பல் சேவை இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்துறை வளர்ச்சிக்கும், மக்களிடையே கலாசார மற்றும் மத ரீதியான தொடர்புகளை வளர்ப்பதற்கும், உல்லாசப் பயணத்துறைக்கும் பெருமளவுக்கு உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றபோதிலும், இதன் கட்டணம் அதிகமாக இருப் பதுதான் பிரதான பிரச்சினை. கட்டுரையில் அதனையும் நீங்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றீர்கள். இந்தக் கட்டணத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளைச் சம்பந்தப்பட்டவர்கள் முன்னெடுக்க வேண்டும்.

**ஐ.தம்பிராஜா, வேலணை**

●●●

### கறிவேப்பிலை செய்கை

கறிவேப்பிலைச் செய்கை தொடர்பாக கடந்த வாரம் ஆனந்தன் பிரேம்நாத் எழுதியிருந்த கட்டுரை எம்மைப்போன்ற பலருக்கும் பயனுள்ளதாக இருந் திருக்கும். அனேகமாக அனைவரது வீடுகளிலும் கறிவேப்பிலை இருக்கின்ற போதிலும், அதனை எவ்வாறு சரியாக உற்பத்தி செய்வது, அதனுடைய பயன்கள் எவை என்பவை தெரியாத நிலையிலேயே நாம் இருந்துள்ளோம். அந்த வகையில் சாதாரணமாக வீடுகளிலேயே கறிவேப்பிலைக் கண்டு களை வைத்திருப்பவர்கள் கூட அவற்றை எவ்வாறு திட்டமிட்டு, பயனுள்ள முறையில் செய்ய முடியும் என்பதை அந்தக் கட்டுரை தெளிவாக வெளிப் படுத்தியிருக்கின்றது. சாதாரண மக்களும் பயனடையக் கூடிய வகையில் அந்தக் கட்டுரையைத் தந்த கட்டுரையாளருக்கும், வெளியிட்ட பொருண்மி யம் வார இதழுக்கும் நன்றி.

**எம்.புவனேஸ்வரி. தேவிபுரம், முல்லைத்தீவு**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1900 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 3800 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி –

**Green media House (Pvt) Ltd,**
**68, crossette lane, Jaffna.**

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

---------------------------------------------------------------

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ------------------------------------------------
**முகவரி** - ------------------------------------------------
**தொலைபேசி இலக்கம்** - ----------------------------------
**சந்தாக் காலம்** - ------------------------------------------
**செலுத்திய தொகை** - --------------------------------------
**செலுத்திய திகதி** - ----------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,68,100 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,83,350 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** அரசின் உதவித் திட்டமான அஸ்வெசுமா நலத் தொகையைப் பெறுவதற்கான தகுதியை உடைய ஒரு இலட்சத்து 56 ஆயிரம் பேருக்கு அந்த உதவிகள் இன்னும் வழங்கப்படவில்லை. அவர்களிடம் வங்கிக் கணக்குகள் இல்லாததது தான் அதற்குக் காரணம் எனக்கூறப்படுகின்றது. இதற்கு என்ன காரணம்? இதனை எவ்வாறு தீர்க்க முடியும்?

**ஜெயா கிருஷ்ணன்.**
**வவுனியா**

**பதில் -** இது ஒரு முக்கியமான பிரச்சினைதான். அஸ்வெசுமா என்ற பெயரிலான இந்த வறுமை ஒழிப்புத் திட்டம் ஏழைகள் மற்றும் நலிவடைந்த மக்களை இலக்காகக் கொண்டுதான் ஜூலை மாதத்தில் இலங்கை அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த சமுர்த்தி திட்டத்திலிருந்த பல்வேறு குறைபாடுகள் சர்வதேச நாணய நிதியத்தினால் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்தே இந்தத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால், புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது அதில் இடம்பெறக்கூடிய சிக்கல்களையிட்டு அரசாங்கம் கவனம் செலுத்தாமல் இருந்தது அரசின் பொறுப்பற்ற தன்மையின் வெளிப்பாடு.

வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள பெரும்பாலான மக்களிடம் வங்கிக் கணக்குகள் இருப்பதில்லை. அடையாள அட்டைகள் அவர்களிடம் இல்லாமலிருப்பது உள்ளிட்ட பல காரணங்கள் இதற்கு அடிப்படையாக இருக்கலாம். கடந்த மூன்று மாதங்களாக இதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படவில்லை. இதனால், ஜூலை மாதத்துக்கான கொடுப்பனவைக் கூடப் பெறமுடியாதவர்களாக அவர்கள் இருக்கின்றார்கள். இப்போதுதான் அது தொடர்பாக சில அறிவித்தல்கள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படுகின்றன.

பயனாளர்கள் அசுவெசுமா கணினி அமைப்பினால் வழங்கப்பட்ட கடிதத்தை இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி அல்லது பிராந்திய அபிவிருத்தி வங்கியின் எந்தவொரு கிளையிலும் சமர்ப்பித்தால் அவர்களால் வங்கிக் கணக்குகளைத் திறக்கக்கூடியதாக இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்தார்கள். வழமையாக ஆவணங்களுடன் சென்று வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கு முடியாதிருப்பவர்களுக்கு இந்த வசதி செய்யப்பட்டிருக்கின்றது. அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் ஆக்கபூர்வமான ஒரு செயறபாடாக இதனைக் கருதமுடியும்.

வழமையான நடைமுறைகளின்படி வங்கிக் கணக்கைத் திறக்கமுடியாதிருப்பவர்களுக்காக மாற்று ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அதேவேளையில், இந்த புதிய நடைமுறையின் கீழ் அவர்களுக்கு அந்த உதவிகள் கிடைக்கச் செய்வதையும் அரசாங்கம் விரைந்து செயற்படுத்துவது அவசியம். அதிகாரிகளும் இந்த விடயத்தில் பொறுப்புணர்வுடன் செயற்படுவது அவசியமாகும்.

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருண்மியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -
tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 300/= |
| உருளைக்கிழங்கு | - 220/= |
| பச்சைமிளகாய் | - 350/= |
| தக்காளி | - 250/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 150/= |
| கோவா | - 250/= |
| கரட் | - 350/= |
| பூசணி | - 80/= |
| புடோல் | - 200/= |
| வாழைக்காய் | - 200/= |
| சின்ன வெங்காயம் | - 350/= |
| பெரிய வெங்காயம் | - 300/= |
| பாவற்காய் | - 450/= |
| வெண்டிக்காய் | - 250/= |
| கருணைக்கிழங்கு | - 160/= |
| பயற்றங்காய் | - 400/= |
| லீக்ஸ் | - 200/= |
| பீற்றூட் | - 150/= |
| கறிமிளகாய் | - 400/= |
| முருங்கைக்காய் | - 300/= |
| போஞ்சி | - 550/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 200/= |
| கனடா டொலர் - | 231/= |
| சீன யுவான் - | 43/= |
| யுரோ - | 337/= |
| ஜப்பான் யென் - | 2.1/= |
| சிங்கப்பூர்டொலர் - | 232/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 387/= |
| சுவிஸ் பிராங் - | 355/= |
| அமெரிக்க டொலர் - | 321/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 210/= |
| கனடா டொலர் - | 242/= |
| சீன யுவான் - | 46/= |
| யுரோ - | 352/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர் டொலர் | 243/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 403/= |
| சுவிஸ் பிராங் - | 372/= |
| அமெரிக்க டொலர் - | 331/= |

# கம்புப் பயிச்செய்கையும் அதன் நன்மைகளும்



- கி.ஆறுமுகம் -

கம்புப்பயிரானது (Pearl Millet) ஆபிரிக்கா, அமெரிக்கா மற்றும் ஆசிய நாடுகளில் ஒரு முக்கிய உணவுப்பொருட்களாகவும் கால்நடைகளுக்கு சிறந்த தீவனமாகவும் பயன்படுத்தப்பட்டுவருகின்றது. அந்த வகையில் இந்தியாவில் பஞ்சாப் ஹறினா, இராஜஸ்தான் ஆகிய பிரதேசங்களில் ,து முக்கிய உணவுப்பொருளாக பயன்படுத்தப்படுவதுடன் இதற்கான கேள்வியும் அதிகரித்துள்ளது. இப்பயிரானது வறட்சி கூடியளவு வெப்பம் மற்றும் அமில கசிவினைக் கொண்ட மிகவும் குறைந்த களித்தன்மை கொண்ட மண் உள்ள பகுதிகளிலும் செழிப்பாக வளரக்கூடிய தன்மை கொண்டது. மேலும், இத மிகவும் விலை குறைந்ததும் அதிகூடிய மருத்துவக்குணமும் கொண்டதனாலேயே மேலே குறிப்பிட்ட நாடுகளில் வாழும் மக்கள் பாரியளவில் நாட்டம் காட்டுகின்றார்கள்.

தற்போது கம்பு பயிரானது இலங்கையில் மிகவும் குறைந்த அளவில் அல்லது பாவனையில் இல்லாத தானிய வகைகளில் ஒன்றாகும். ஆனாலும் 1990 களில் கம்பு தானியம் இலங்கையின் வடபகுதியில் கோப்பாய், வலிகாமம் ஆகிய பிரதேசங்களில் பயிரிடப்பட்டது. அந்தக்காலப்பகுதியில் எம்மக்கள் பாரிய உணவு நெருக்கடியை எதிர்கொண்ட போது கம்பு தானியவிதைகள் இந்தியாவில் இருந்து எடுத்து வரப்பட்டு விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டதுடன் மட்டுமல்லாது அவ்வாண்டில் நடைபெற்ற மே தினத்தில் மக்களுக்கு இதனை அறிமுகப்படுத்தும் முகமாக கம்பு மாவில் லட்டு தயாரித்து வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதொரு விடயம் ஆகும்.

மேலும் கம்பு பயிர்ச்செய்கை முறையானது மிகவும் இலகுவானதும், குறுகிய காலத்தில் பயன்பெறக்கூடியதுமாகும்.

கம்பு தானியத்தின் பயிர்ச்செய்கை முறையும் நன்மைகளும் பின்வருமாறு அமையும் கம்புப் பயிர் மூன்று மூன்றரை மாதத்தில் அறுவடை செய்யக்கூடியது.

இது வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது.

நீர்ப்பாசன வசதி இருக்கின்ற இடங்களில் கூடிய விளைவைப் பெறக்கூடியது.

இதன் விதையை வீச்சு விதைப்பாகவும் நாற்றுப்போட்டும் பயிரிடலாம்.

இப்பயிர்ச்செய்கைக்கு கிருமிநாசினி, இரசாயன உரங்கள் தேவையற்றது.

இப்பயிர்ச்செய்கை இரண்டு மாதத்தில் விரைவாக வளர்ச்சியடைந்து கதிர் (பொத்தி) வரத்தொடங்கும்.மேலும் பயிர் மட்டங்கள் வெடித்து பல கிளைகளாக விளைச்சலைத் தரும்.

மூன்று தொடக்கம் மூன்றரை மாதங்களில் முதிர்ச்சியடைந்து அறவடை செய்யலாம்.

இதன் தண்டு மற்றும் இலைகளை கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படுத்தலாம்.

100gல் உள்ள முக்கியமான போசணை பெறுமானங்கள் பின்வருமாறு அமையும்

| **போசணைப்பொருட்கள்** | **அளவு** |
|---|---|
| புரதம் - | 12 g |
| நீர் - | 12 g |
| காபோவைதறேற்று - | 67g |
| கொழுப்பு - | 5 g |
| கனியுப்புக்கள் - | 2 g |
| நார்ச்சத்து - | 1 g |
| கல்சியம் - | 42 mg |
| பொஸ்பரசு - | 242mg |
| இரும்பு - | 8 mg |

மேற்குறிப்பிட்ட போசணைப் பெறுமானங்களின் அடிப்படையில் இக்கம்புப் பயிரானது பின்வரும் மருத்துவம் சார் நன்மைகளையும் கொண்டுள்ளது.

* ஈமோகுளோபினின் அளவைக்கூட்டும்.
* மலச்சிக்கலைக்கட்டுப்படுத்தும்
* புற்றநோய் எதிர்ப்பு சக்தியை கொண்டது
* நீரிழிவு நோயைக்கட்டுப்படுத்தும்
* என்பு வளர்ச்சியில் பங்கெடுக்கும்
* வயிற்றுப்புண்ணைக்கட்டுபடுத்தும்
* உடல் எடையைக்கட்டுப்படுத்தும்
* பித்தப்பைக் கற்களைக்குறைக்க உதவும்

ஆகவே உணவு மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்கள், அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்பினர் ஆகிய அனைவரும் ஒன்



றினைந்து இந்த வகையான சிறு தானியப் பயிர்களின் பயிர்ச்செய்கையையும் அதன் பயன்பாட்டினையும் மக்கள் மத்தியில் அதிகரிப்பதற்கு விழிப்புணர்வினை வழங்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது.

மேலும் 1990 களில் கம்புப்பயிரிடலில் பங்கெடுத்ததன் மூலமும் எனக்கு இந்த பயிர்ச்செய்கையில் இருக்கும் ஆர்வத்தினாலும் குறிப்பிட்ட அளவு கம்புத்தானியங்களை இந்தியாவில் இருந்து பெற்று, மாதிரியாக சிறிய இடத்தில் பயிரிட்டு ஓரளவு வளர்ச்சியும் அவதானிக்க முடிகின்றது.

ஆகவே, எமது அரசாங்கமானது விவசாயதிணைக்களங்களினூடாக கம்புப்பயிரின் தானியங்களை பொருத்தமான வழியில் பெற்று எமது விவசாயிகளுக்கு வழங்கி இப்பயிர்ச்செய்கையினை அதிகளவில் மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்துவதன் மூலம் தற்போது நாட்டில் நிலவும் உணவுக்கான நெருக்கடியினை குறைப்பதுடன் சிறந்த போசாக்கான எதிர்காலத்தையும் கட்டியெழுப்ப உறுதுணையாக அமையும்.

## வரி விளம்பரம்

## classified advertisement




### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு - 0766482303

---

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு - 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்

## classified advertisement




பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள அழையுங்கள். - 0772034807

---

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

---

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

---

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கித் தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 0753780530

---

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய தரத்திலான கருவாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

---

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஒளடதங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கவும்
0766996628

---

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப் பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளன.
தொடர்புகளுக்கு - 077 6566508.

---

## காணி விற்பனைக்கு




A9 வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்புக் காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

---

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றிய அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை -
0772034807

---

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 0773078799

---

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

---

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாகச் சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடர்புக்கு 0773024473

---

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்துத் தரப்படும்.
0775652282

---

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்பவர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.
Krishnapillai Karan - 0773853765

---

## கல்வி

இம்முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

---

சிறந்த இசையமைப்பாளரால் ஓகன் வாத்தியம் கற்பிக்கப்படுகிறது. - 0772469113

---

வன்னி கல்லூரி கிளிநொச்சியில் இலகுவழியில் ஜெர்மன் மொழி A1 பரீட்சைக்கான இலகுவான முறையில் தயார்படுத்தல் இடம்பெறுகின்றது. தொடர்புகளுக்கு - 0769395457

---

கிளிநொச்சியில் ஆரிக்கலையினைக் கற்றுக் கொள்வதோடு உங்களுக்குத் தேவையான (design) ஆடைகளுக்கு ஆரிவேலைகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு - 0769395457

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி ஆகிய பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/- (USD 550)
பரப்பு 20 இலட்சம் (USD 5,500)
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd





வேதநாயகம்
தபேந்திரன்
# பிள்ளை கைவிடாது

எமது முன்னோர் பயிரினங்களுக்கும் உயிரினங்களுக்கும் பெயர் வைக்கும் போது பட்டறிவுடன் தான் வைத்துள்ளனர்.

தென்னம்பிள்ளை எனத் தென்னை மரத்துக்குப் பெயரிட்டனர்.

நாம் வளர்க்கும் பிள்ளை வளர்ந்து எம்மைப் பார்ப்பது போலத் தென்னம்பிள்ளையும் பார்க்கும் எனச் சரியாகக் கணக்கிட்டனர்.

டொலர் நெருக்கடி எனும் அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை சென்ற 2022 ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஆரம்பித்தது.

இறக்குமதிச் செலவுகளுக்குக் காசின்றி நாடு தவித்தது. அதனால் வெளிநாடுகளிலிருந்து பொருள்களுடன் கப்பல் வருவது நின்றது. அதன் விளைவு இங்கிருந்து பொருள்கள் போவது நின்றது.

தென்னை மட்டைகளைத் தும்பாக்கி அல்லது தூசாக்கி இரசாயன உரம் கலந்து பசளையாக அனுப்புவது நின்று போனது.

தேங்காய் உரித்து வரும் தென்னை மட்டைகள் தேடுவாரற்ற பொருட்களாகின.

தேடுவாரற்ற பொருளானாலும் இது தென்னை மரத்துக்கு பசளையாகி அமோக விளைச்சலைத் தர வல்லது.


பொறுத்தார் அரசாள்வார் என்பது போல தென்னை மட்டைகளை இதில் கூறும் செய்முறைக்கு ஏற்ப செய்து பாருங்கள் நிச்சயமாகப் பயன் பெறுவீர்கள்.

தற்போது பருவ மழை தொடங்கி விட்டது. தென்னம்பிள்ளைகளுக்குப் பசளையிடத் தகுந்த காலம்.

01.காய்க்கும் தென்னை மரங்களது அடியிலிருந்து எட்டடி தூரத்தில் 2 அடி ஆழம்,8 அடி நீளம்,4 அடி அகலத்தில் கிடங்கு வெட்டுங்கள்.

02.எட்டு அடி தூரத்திற்குள் கிடங்கு வெட்டினால் தென்னையில் வரும் குரும்பைகள் 03 மாதத்திற்குக் கொட்டும். அதனால் தான் 08 அடி தள்ளி வெட்ட வேண்டும்.

03.தென்னை மட்டைகளை - பொச்சுகளை மேலே பொச்சு இருக்கக் கூடியதாக



அடுக்குங்கள். தரையிலிருந்து ஒரு அடி உயரம் வரக் கூடியதாக அடுக்குங்கள்.

04.பின்னர் மண்ணால் மூடுங்கள். முற்றாக மறைத்து மண்ணால் மூடுங்கள். இல்லா விட்டால் பாம்புகள் இதன் குளிர்மைக்குக் குடியிருக்கப் புதுப் பிரச்சினைகள் வரும். மழைக்கு மண் கரைந்தாலும் திரும்ப மூடுங்கள்.

05.தென்னை மட்டை தன்னைப் போல 06 மடங்கு நீரை உறிஞ்சி வைத்துக் கொள்ளும். தென்னைக்குக் குளிர்மையைக் கொடுக்கும்.

06.இரண்டு மாரி கழியப் பொச்சுகள் உக்கிப் பசளையாக மாறும். தென்னை மரங்கள் மூச்சாகக் காய்த்துக் கொள்ளும். வட்டு நிறைந்த காய்கள் இருக்கும். தேங்காய்கள் பருமனில் பெரிதாக இருக்கும். தேங்காய்களின் உள்ளீடும் பெரிதாக இருக்கும். துருவி வரும் தேங்காய்ப் பாலும் நிறைய வரும்.

07.இரண்டு மாரி கழிய மூன்றாவது மாரி வரும்போது தென்னை மட்டைகள் உக்கிக் கிடங்கு தாழிறங்கிக் கொள்ளும்.

08.அப்போது அதன் மேல் திரும்பவும் தென்னை மட்டைகளை வைத்து கிடங்கை மூடுங்கள். பசளைச் சுற்றோட்டம் தொடரும்.

09.தென்னை மட்டை தாட்டால் 02 வருடம் பொறுமை காருங்கள். உயர் பலன் கிடைக்கும். திரும்பத் திரும்ப ஒவ்வொரு மாரியின் போதும் இச் சுற்றோட்டத்தைத் தொடருங்கள். உயர் அறுவடையை அனுபவிக்கலாம்.

10.எமது நாடு முழுவதும் இந்த முறையிலான இயற்கைப் பசளை முறையை பரவச் செய்வதன் மூலமாக தென்னை இறக்குமதிக்கான உரச் செலவைப் பெருமளவுக்குக் குறைக்கலாம். வீடும் நாடும் உயரும்.

-தென்னைப் பயிர்ச் செய்கை, மரத்தின் நோய்கள் தொடர்பான விளக்கங்களுக்கு அனுபவம் மிக்க ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் சத்தியேந்திரா 0775056263 அவர்களுடன் தொடர்புகொள்ளவும்.




# சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட ஒப்பந்தம்



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

சர்வதேசநாணயநிதியத்தின்ஆளுகையை கண்டறியும் பயிற்சியை மேற்கொண்ட முதலாவது ஆசிய நாடு இலங்கையாகும்.

இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் முதல் மீள்பார்வையில் IMF பணியாளர் மட்ட ஒப்பந்தத்தை எட்டியது. இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) தூதரகத்தின் அண்மைய விஜயமும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பணியாளர் மட்ட ஒப்பந்தமும் நாட்டின் பொருளாதார மீட்சிப் பயணத்தில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

48 மாத விரிவாக்கப்பட்ட நிதி வசதி (EFF) ஆதரவுத் திட்டத்தின் முதல் மீளாய்வு தொடர்பான ஒப்பந்தம் இலங்கைக்கு ஒரு சாதகமான படியாகும். பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கும் தேவையான சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதற்கும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு சர்வதேச நாணய நிதியம் மற்றும் இலங்கை அதிகாரிகளின் அர்ப்பணிப்பை இந்த ஒப்பந்தம் குறிக்கின்றது.

IMF நிர்வாகம் மற்றும் நிர்வாக சபையின் மீளாய்வு அங்கீகாரம் கிடைத்தவுடன் SDR 254 மில்லியன் (சுமார் 330 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) கிடைக்கும்.

கொழும்பில் அதிகாரிகளுடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களுக்குப் பிறகு மற்றும் மராகேச்சில் வருடாந்த கூட்டங்களின் போது, இலங்கைக்கான IMF மூத்த தூதரகத் தலைவர் பீட்டர் ப்ரூயர் மற்றும் துணைத் தூதுவர் திருமதி. கட்சியரினா ஸ்விரிட்சென்கா ஆகியோர் பின்




வரும் அறிக்கையை வெளியிட்டனர்:

“48 மாத விரிவாக்கப்பட்ட நிதி வசதி (EFF) ஏற்பாட்டின் ஆதரவுடன் பொருளாதார சீர்திருத்தத் திட்டத்தின் கீழ் முதல் மதிப்பாய்வில் IMF குழு இலங்கை அதிகாரிகளுடன் பணியாளர் அளவிலான ஒப்பந்தத்தை எட்டியது. மார்ச் 20, 2023 அன்று 2.3 பில்லியன் SDR (சுமார் 3 பில்லியன் அமெரிக்க டொலர்) தொகைக்கு IMF நிர்வாகக் குழுவால் இந்த ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டது.

”ஊழியர் நிலை ஒப்பந்தம், IMF நிர்வாகம் மற்றும் IMF நிர்வாகக் குழுவின் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. அதாவது:

(i) அனைத்து முன் நடவடிக்கைகளையும் அதிகாரிகளால் செயற்படுத்த வேண்டும்.

(ii) கடன் மறுசீரமைப்புடன் போதுமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தும் நிதியுதவி உத்தரவாத மதிப்பாய்வுகளை நிறைவு செய்தல், மறுசீரமைப்பு சரியான நேரத்தில் மற்றும் திட்டத்தின் கடன் இலக்குகளுக்கு ஏற்ப முடிக்கப்படும் என்ற நம்பிக்கையை தொடர்ச்சியாக ஏற்படுத்துதல்.

”IMF நிர்வாகக் குழுவின் ஒப்புதலின் பேரில், இலங்கைக்கு SDR 254 மில்லியன் (சுமார் 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) கிடைக்கும். இந்த ஏற்பாட்டின் கீழ் வழங்கப்பட்ட மொத்த IMF நிதி உதவியை SDR 508 மில்லியனாக (சுமார் 660 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) இருக்கும்.

”EFF இன் கீழ் உள்ள இலட்சிய சீர்திருத்த நிகழ்ச்சி நிரலுக்கு அதிகாரிகள் உறுதியுடன் இருக்கின்றார்கள் மற்றும் அவர்களின் சீர்திருத்த முயற்சிகள் பாராட்டத்தக்கவை எனக்கூறப்பட்டுள்ளது. இவற்றுள் குறிப்பாக விரைவான பணவீக்கம் மற்றும் இந்த ஆண்டின் இறுதிக்குள் எதிர்பார்க்கப்படும் குறிப்பிடத்தக்க நிதி சரிசெய்தல் ஆகியவை அடங்கும். ஜூன் மாத இறுதியில் நிகழ்ச்சியின் செயற்றிறன் திருப்திகரமாக இருந்ததாகவும், ஜூன் மாத இறுதிக்கான அனைத்து அளவு செயற்றிறன் அளவுகோல்களும் பூர்த்தி செய்யப்பட்டன என்றும், செலவு மீதிகள் தவிர. வரி வருவாயைத் தவிர அனைத்து குறிப்பான இலக்குகளும் எட்டப்பட்டன என்று மேலும் கூறப்பட்டுள்ளது.

பெரும்பாலான கட்டமைப்பு அளவுகோல்கள் செப்டம்பர் 2023 இன் இறுதிக்குள் தாமதமாக நிறைவேற்றப்பட்டன என்பதை அறிக்கை கூறிகின்றது. குறிப்பாக, ஆசியாவில் சர்வதேச நாணய நிதியத்தின் ஆளுகையை கண்டறியும் பயிற்சியை மேற்கொண்ட முதலாவது நாடு இலங்கையாகும். திட்ட அளவுருக்களுக்கு ஏற்ப 2024 ஆம் ஆண்டில் நிதி ஒருங்கிணைப்பை ஆதரிப்பதற்கான வருவாய் நடவடிக்கைகளில் முன்னேற்றம் இன்னும் தொடர்கின்றது என்று பாராட்டப்பட்டுள்ளது.

மேலும், ”பொருளாதாரம் ஸ்திரத்தன்மைக்கான தற்காலிக அறிகுறிகளைக் காட்டுகின்றது. பணவீக்கம் செப்டம்பர் 2022 இல் உச்சமாக இருந்த 70 சதவீதத்திலிருந்து 2023 செப்டம்பரில் 1.3 சதவீதமாகக் குறைந்துள்ளது. இந்த ஆண்டு மார்ச்-ஜூன் காலத்தில் மொத்த சர்வதேச கையிருப்பு $1.5 பில்லியன் அதிகரித்துள்ளது. மேலும் அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறையும் குறைந்துள்ளது. இந்த ஸ்திரத்தன்மையின் ஆரம்ப அறிகுறிகள் இருந்தபோதிலும் முழுமையான பொருளாதார மீட்சி இன்னும் உறுதி செய்யப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

இரண்டாவது காலாண்டில் உண்மையான GDP ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 3.1 சதவிகிதம் குறைவடைந்துள்ளது. மற்றும் முக்கியமான பொருளாதார குறிகாட்டிகள் கலவையான சமிக்ஞைகளை தொடர்ந்து வழங்குவதன் மூலம் வளர்ச்சி வேகம் குறைவாகவே உள்ளது. நீண்டகாலக் கடன் மறுசீரமைப்புக் கலந்துரையாடல்களின் விளைவாக இலங்கையின் வெளி நிலை பலவீனமடைந்துள்ளது. மற்றும் சமீப மாதங்களில் கையிருப்பு குவிப்பு குறைந்துள்ளது. கடனின் நிலைத்தன்மையை விரைவாக மீட்டெடுப்பதற்கு இசைவான கடன் மறுசீரமைப்புகளை ஏற்றுக்கொள்வது, இலங்கை வணிகங்கள் மற்றும் வெளி நிதியுதவியைக் கட்டுப்படுத்தும் நிச்சயமற்ற தன்மையைத் தீர்ப்பதற்கு முக்கியமாகும், என்றும் அறிக்கையில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

“சீர்திருத்த வேகத்தைத் தக்கவைதுக்கொள்வது, பொருளாதாரத்தை ஒரு நிலையான மீட்சியை நோக்கி வழிநடத்துவதிலும், நிலையான, உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை வளர்ப்பதிலும் மிக முக்கியமானது என்று கூறப்பட்டுள்ளது. தேவையான வரி நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும், வரி நிர்வாகத்தை வலுப்படுத்துவதன் மூலமும், வரி ஏய்ப்பைத் தீவிரமாக அகற்றுவதன் மூலமும், வருவாயை அதிகரிப்பதற்கும், சிறந்த நிர்வாகத்தைக் குறிப்பதற்கும் அதிகாரிகளின் உறுதிப்பாட்டை இந்தக் குழு வரவேற்றுள்ளது.

எரிபொருள் மற்றும் மின்சார விலை நிர்ணயத்தில் செலவை மீட்டெடுப்பது அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களில் இருந்து எழும் நிதி அபாயங்களைக் குறைக்க உதவுகின்றது. சமூகப் பாதுகாப்பு வலையமைப்பை மேலும் வலுப்படுத்துவது ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களைப் பாதுகாக்க முக்கியமானதாக உள்ளதென கூறப்பட்டுள்ளது. பணவீக்கம் எதிர்பார்த்ததை விட வேகமாக குறைந்தாலும், பணவீக்க எதிர்பார்ப்புகளை மேம்படுத்தவும் மேக்ரோ பொருளாதார ஸ்திரத்தன்மையை ஆதரிக்கவும் தொடர்ந்து கண்காணிப்பு தேவை இருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தொடர்ச்சியான வெளிப்புற நிச்சயமற்ற தன்மைக்கு எதிராக, வலுவான இருப்பு குவிப்பு மூலம் வெளிப்புற இடையகங்களை மீண்டும் உருவாக்குவது முக்கியம் என்று அழுத்தமாக அறிக்கை சொல்கின்றது.

“அதிகாரிகளின் உள்நாட்டுக் கடன் செயற்பாட்டைத் தொடர்ந்து முக்கியமான அடுத்த கட்டம் IMF நிர்வாக வாரியம் - அங்கீகரிக்கப்பட்ட திட்ட அளவுருக்கள் மற்றும் கடன் இலக்குகளுடன் ஒத்துப்போகும் கடன் மறுசீரமைப்பில் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடன் ஓர் ஒப்பந்தத்தைப் பெறுவதாகும். இலங்கைக்கும் சீனாவின் ஏற்றுமதி-இறக்குமதி வங்கிக்கும் இடையிலான தற்காலிக உடன்படிக்கையை இவர்கள் கவனத்தில் கொண்டுள்ளதாகவும், அவற்றைப் பெறும்போது விவரங்களைப் பகுப்பாய்வு செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

அனைத்து உத்தியோகபூர்வ கடனாளிகளையும் முன்னோக்கி நகர்த்தவும், அவர்கள் வழங்கிய நிதி உத்தரவாதங்களுக்கு ஏற்ப பொருத்தமான கடன் மறுசீரமைப்பினை ஒப்புக்கொள்ளவும் இந்தக்குழு கேட்டுக் கொண்டுள்ளது. வர்த்தகக் கடன் வழங்குபவர்களுக்கும் இலங்கைக்கும் இடையிலான

(23ஆம் பக்கம் பார்க்க)

# மாற்றம் ஒன்றே மாறாதது

நேர்கண்டவர் -
ஞா.கவினி

தலைமுறைகள் தாண்டி ஒரு தொழிலில் நிலைத்து நிற்பது என்பது, அதுவும் இந்தக் காலத்தில் மிகப் பெரும் சவாலாக தான் இருக்கும் .

ஆனாலும் தன் மூதாதையர்கள் தனக்கு கடத்திய தொழிற்கலையை மிகவும் ஆக்கபூர்வத்துடன் செய்துவரும் செல்லத்துரை இராசநாயகம் சாருஜன் அவர்களைத் தமிழர் பொருண்மியம் நேர் கண்டது.

யாழ்ப்பாணத்தின் பழம்பெரும் கிராமங்களில் ஒன்றான வட்டுக்கோட்டையை சேர்ந்த சாருஜன் தச்சுத் தொழிலை தன்னுடைய பூர்வீக தொழிலாகக் கொண்டவர். காலம் காலமாக அவருடைய மூதாதையர்களின் வழிவந்த இந்தத் தொழிலிலே மிகவும் தேர்ச்சியையும் நுட்பங்களையும் கற்றுத் தேர்ந்து கொஞ்சம் மாத்தி யோசிப்போம் என்ற தோரணையில் இன்று இடியப்ப உரல், பலகார அச்சுக்கள் என்று இன்ன பிற அழகியல் நுட்பங்களோடு தனது படைப்புக்களை வெளிக்கொண்டு வந்திருக்கிறார்.



தற்போது எல்லாம் இலங்கையின் பிற மாவட்டங்களில் இருந்து இந்த இடியப்ப



உரல் சந்தைக்கு வந்து கொண்டிருக்கிறது.

அதுவும் குறைந்த விலையில் அவர்கள் இதனை சந்தைப்படுத்திக்கொண்டிருக்க உங்களது பொருளுக்கான கேள்வி சந்தைகளில் எப்படி இருக்கிறது என்று வினாவினோம்.

எந்த வனாந்தரத்தில் இருந்தாலும் தரமான பொருளுக்கான கேள்வி எப்போதும் இருந்து கொண்டே இருக்கும். வெளி மாவட்டங்களில் இருந்தும், உள்ளூர்களில் இருந்தும் அநேகம் உற்பத்திகள் ஒரே மாதிரி வந்து கொண்டிருந்தாலும், என்னுடைய உற்பத்திகளுக்கு என்று ஒரு தனி மரியாதையும் விற்பனையும் சந்தையில் இருக்கின்றது.

## இராசநாயகம் சாருஜன்

கடைகளில் என்னுடைய பலகார அச்சுகளையும், இடியப்பஉரல்களையும் தேடி வாங்கும் ஒரு வாடிக்கையாளர் கூட்டத்தை உருவாக்கி வைத்திருக்கிறேன் என்ற பெருமிதமாக கூறுகிறார் சாருஜன்.

உண்மையிலே சாருஜனின் தயாரிப்புகளைப் பார்த்தபோது ஆச்சரியமாக தான் இருந்தது.

ஒவ்வொரு தயாரிப்பும் சந்தையில் பழக்கத்தில் இருந்தாலும், அவை எல்லாவற்றையும் விட சாருஜனின் உற்பத்திகள் மிகத் தரமாகவும் நுட்பத்துடனும் காணப்பட்டன.

உள்ளூர் கடைகள் தொடங்கி புலம்பெயர் சந்தைகளிலும் கூட சாருஜனின் உற்பத்திகள் காணப்படுகின்றன.

பலதரப்பட்ட தேவைகளுக்காக இவரை அணுகும் வாடிக்கையாளர்கள் தமக்கும் தம் சார்ந்தவர்களுக்கும் பொருட்களை கொள்வனவு செய்வதோடு வெளிநாட்டில் இருப்பவர்களுக்கும் இவரை அறிமுகப்படுத்துகின்றன ர்.

தற்போது புலம்பெயர் தேசங்களில் உள்ள தமிழர்கள் மிகவும் விருப்பத்துடன் இவரது பொருட்களை கொள்வனவு செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

வரும் காலங்களில் ஒவ்வொரு அடிப்படையிலும் சார்ஜனின் இடியப்பவுரல் இருக்கும் என்பதில் மாற்றமில்லை. ஒரு முறை பொருளைக் கொள்வனவு செய்த வாடிக்கையாளர்களே இவரது விளம்பரதாரர்கள் ஆகவும் மாறி வருகிறார்கள்.

தரமான உற்பத்தி பொருளுக்கு என்று பெரிதாக எந்த விளம்பரங்களும் தேவைப்படுவது இல்லை. வாடிக்கையாளர்களே அவற்றை மற்றவர்களுக்கும் விளம்பரப்படுத்திவிடுவார்கள்.

மூன்று தலைமுறைக்கும் மேலாக தகப்பன் பாட்டன் பூட்டன் முப்பாட்டன் என்று இவர்கள் இந்த தொழிலில் கொடி நாட்டி வருவதும் வாடிக்கையாளர் மத்தியில் ஒரு வகை நம்பகத்தன்மையை ஏற்படுத்தியிருக்கிறது என்று சொல்லலாம்.

தனது வீட்டின் ஒரு பகுதியை தொழில் கூடமாக அமைத்து அங்கே மிகவும் ஆக்கபூர்வமான உற்பத்திகளைச் செயல்படுத்தி வருகிறார் சாருஜன்.

இந்தத் தொழிலை உங்களுடைய பிள்ளைகளுக்கும் ஏனையவர்களுக்கும் கடத்தும் எண்ணம் உங்களுக்கு இருக்கிறதா



என்று கேட்டோம்.

"உண்மையிலேயே இப்போது மரங்களை வெட்டுவது பற்றி எனக்கு அவ்வளவாக விருப்பமில்லை. அத்தோடு இந்த உற்பத்திப் பொருளுக்குத் தேவையான மரங்கள் கிடைப்பது அரிதாகவே இருக்கின்றது.

இது காலப்போக்கில் எமது தொழிலுக்கான பின்னடைவாக இருக்கலாம் என்று நினைக்கிறேன்.

உணவு பண்டங்களை தயாரிப்பதற்கான மூல உற்பத்திகள் என்ற வகையில் இவை மிகவும் தரம் வாய்ந்த நஞ்சற்ற மரங்களில் இருந்து பெறப்பட வேண்டும்.



அப்படி மரங்களை தேடும்போதும் அவற்றை கொண்டு வரும்போதும் நிறைய சவால்களை எதிர்நோக்க வேண்டி இருக்கிறது.

அதற்காக அலுமினிய உபகரணங்களையோ பாவனைக்கு உதவாத மரங்களிலான உற்பத்திகளையோ மக்களுக்கு கொடுப்பதில் எனக்கு உடன்பாடில்லை.

ஆகவே இனி வரும் காலங்களில் சிறிய அளவில் இந்தத் தொழிலை செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன்.

அத்தோடு எனது பிள்ளைகளுக்கு இதைக் கடத்துவது என்பது விருப்பமாக இருந்தாலும் மிகக் கடினமான விடயம். இந்த தலைமுறை கொஞ்சம் வித்தியாசமாக இருக்கின்றது. இவர்கள் கல்வி கற்று சமூகத்தில் அந்தஸ்து உள்ளவர்களாக மாறினால் மட்டுமே இவர்களது பொருளாதார நிலையிலும் மாற்றங்கள் ஏற்படும்.

ஆகவே இனி வரும் காலங்களில் இந்த தொழிலை மட்டும் நம்பி இருக்காமல் கல்வியையும் இன்னபிற பயிற்சிகளையும் அவர்களுக்கு வழங்க வேண்டும் என்பது எனது விருப்பம் என்கிறார்.

காலத்திற்கு காலம் மாற்றம் அடைந்து வரும் இந்த உலகச் சூழலில், நாங்கள் அனைவரும் மாற வேண்டிய தேவையும் இருக்கின்றது. அதற்கு ஏற்றாற்போல தொழில்நுட்பங்களோடு கூடிய தச்சுத் தொழிலை ஆரம்பித்தால் அது நீண்ட காலப் பலனை தரும் அதற்கு கல்வி இன்றி அமையாததாக இருக்கின்றது.

இந்தியாவில் பொறியியல் துறையில் பட்டம் பெற்ற ஒரு பட்டதாரி தொழில்நுட்பங்களோடு சேர்த்துத் தனது பாரம்பரிய தச்சுத் தொழிலையும் நகர்த்தி வருகிறார்.

அது உலகம் முழுக்கப் பலத்த வரவேற்பைப் பெற்றிருக்கின்றது.

கல்கி என்ற அந்த நிறுவனத்தைப் போல சாதாரணமாக தச்சு தொழிலாளிகளாக இருக்கும் எமது மக்களும் தொழில்நுட்பங்களோடு சேர்ந்து இயங்கத் தொடங்க வேண்டும்.

மாற்றம் ஒன்றே மாறாதது என்கிறார் தலைமுறை தலைமுறையாக தன்னுடைய தொழிலில் நின்று ஜெயித்து வரும் செல்லத்துரை இராசநாயகம் சாருஜன்.





> **"உண்மையிலேயே இப்போது மரங்களை வெட்டுவது பற்றி எனக்கு அவ்வளவாக விருப்பமில்லை. அத்தோடு இந்த உற்பத்திப் பொருளுக்கு தேவையான மரங்கள் கிடைப்பது அரிதாகவே இருக்கின்றது. இது காலப்போக்கில் எமது தொழிலுக்கான பின்னடைவாக இருக்கலாம் என்று நினைக்கிறேன். உணவுப் பண்டங்களை தயாரிப்பதற்கான மூல உற்பத்திகள் என்ற வகையில் இவை மிகவும் தரம் வாய்ந்த நஞ்சற்ற மரங்களில் இருந்து பெறப்பட வேண்டும். அப்படி மரங்களைத் தேடும்போதும் அவற்றைகொண்டு வரும் போதும் நிறைய சவால்களை எதிர்நோக்கவேண்டி இருக்கிறது. அதற்காக அலுமினிய உபகரணங்களையோ பாவனைக்கு உதவாத மரங்களிலான உற்பத்திகளையோ மக்களுக்கு கொடுப்பதில் எனக்கு உடன்பாடில்லை."**

# சந்தைப்படுத்தல்?



## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

எந்தப்பொருளை உற்பத்தி செய்தாலும் அந்தப்பொருளைச் சந்தைப்படுத்த வேண்டும். சந்தைப்படுத்த முடியாது போனால் அது முதலுக்கே மோசமாகிவிடும். எனவே உற்பத்தி செய்யும் பொருள் மக்களுக்கு தேவையானதாக இருக்க வேண்டும் அன்றாடம் செலவிடும் பொருளாகவும் இருக்க வேண்டும்.

உதாரணமாக மளிகைக்கடை வைத்திருப்பவருக்கு அன்றாடம் பொருள் விற்றுக் கொண்டே இருக்கும். வாங்கிக் கொண்டு செல்பவர்களும் அன்றாடம் அவற்றை உண்டு முடித்தபின் மீண்டும் மீண்டும் வாங்க வந்துகொண்டே இருப்பார்கள். ஆனால் புடவைக்கடையோ மணிக்கடைகளோ, செருப்புக்கடைகளோ அந்த அளவுக்கு மக்களைக் கவருவதில்லை.

ஆனால் இவற்றுக்கு விதிவிலக்காக ஊழியர் என்னிடம் சொன்னார். காரணம் ஒன்றும் புதிதாக இல்லை. அவர்கள் தமது நகைகளை மளமளவென வந்து கொண்டிருக்கும் மாதிரிகளுக்கேற்ப மாற்றி மாற்றி செய்து கொண்டிருக்கிறார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்னர் செய்த அட்டியலை மூன்றாவது மாதம் அழித்து வேறு டிசைனில் செய்கிறார்கள்.

அதேபோல வளையல்களையும் மோதிரங்களையும் மாற்றிக் கொள்கிறார்கள். ஆடைகளின் வண்ணத்திற்கும் அவற்றின் மோஸ்தர்களுக்கும் ஏற்ற வகையில் தங்கத்தை உருக்கி உருக்கி புதிய நகைகளாக்கும் மனநிலை பெண்களிடம் வளர்ந்து வருகிறது.

அதேயளவுக்கு ஆண்களும் இப்போது நகைகளில் மோகம் கொண்டவர்களாகவே தெரிகின்றனர். இதே மனோபாவம் உண்ணும் உணவுகளிலும் மேவியுள்ளது.

ஆனால் உணவு உற்பத்தியில் ஈடுபடும் மக்கள் பெரும்பாலும் பொருளாதார வறுமையிலேயே உள்ளார்கள் காரணம் பணம் படைத்தவர்களின் தேவைகள், கவனம் என்பவை, ஆடம்பரப் பொருட்களில் செலுத்தப்படுவதுபோல உற்பத்திப் பொருட்களில் கவனம் செலுத்துவதில்லை. உதாரணமாக, விவசாயப் பொருட்களை உள்ளூரில் உற்பத்தி செய்பவர்கள் அதனை விற்பது பெரும்பாடாக உள்ளது.

கோழி வளர்ப்பதில் பெரும் இடர்களை எதிர் நோக்கியுள்ள விவசாயிகள் அதிகம் அவர்களில் பண்ணைக் கோழிகளான புறொய்லர் இன கோழிகளை வளர்ப்போரின் இன்றைய நிலை மிகவும் கவலைக்கிடமானது. முட்டைக்கோழிகளை வளர்த்தால் அவை அதிகமாக முட்டையிடத் தொடங்க, அதை ஒரு சந்தை வியாபாரியிடமே கொடுத்தாக வேண்டும். இந்த பண்ணைக் கோழிகளின் முட்டை விரைவில் கெட்டுப்போய் விடும். எனவே வியாபாரியே விலையை தீர்மானிக்கிறான். உற்பத்தியாளன் நட்டமடைகிறான். அவர்களால் பெருந் தொகை பண முதலீட்டில் வளர்க்கப்படும் இறைச்சிக் கோழிகளுக்கு உரிய விலை கிடைப்பதில்லை. கரணம் தப்பினால் மரணம் என்பது போல அவைகளை உரிய நாட்களுக்குள் விற்றுத் தீர்க்காவிட்டால். அவை தாமாக இறந்து போகும்.

விவசாயிக்கும் வியாபாரிக்கும் இடையேயான உரையாடல் கோழிகளின் விற்பனை வயதை எட்டியதும் நடைபெறும். “அண்ணை கோழியளை புதன்கிழமைக்குள்ள எடுத்திருவன்” என்பான் வியாபாரி.

புதன்கிழமை அதே வியாபாரி “அண்ண வேற ஒருதர் கடையடிக்க கோழியள கொணந்திட்டார். ஒண்டும் செய்யேலாமப் போச்சு சனிக்கிழமை கட்டாயம் வாறன்” என்பார். கோழி வளர்ப்பவருக்கு மேலதிகமாகச் செல்லும் ஒவ்வொரு நாளுக்கும்

நூறு கோழிகளுக்கு இரண்டாயிரம் வரை மேலதிகச் செலவு போய்க்கொண்டிருக்கும். அத்துடன் அதன் வயதும் ஆபத்தான எல்லைக்குள் வரும். இப்போது வியாபாரி தனது பேச்சின் இறுதிக்கட்டத்துக்கு வருவான். "அண்ண யாவாரம் பெரிசா இல்லை விலையும் விழுந்திட்டுது - இவ்வளவுதான் தரலாம் ஓமெண்டா கட்டுறன்" என்பான்.

ஏழை விவசாயிக்கு இப்போது போட்ட முதலை எடுத்துவிட வேண்டும் என்ற அவசரமே மேலோங்கும். சம்மதிக்க தவறினால் நாளாந்தம் பட்டியிலிருந்து சாவடையும் கோழிகளும் ஏனைய கோழிகளுக்கு மேலதிக நாட்களுக்காக அவன் செலவிடும் பணமும் அவனைப் பயம் கொள்ளச் செய்யும். அவன் என்ன விலையெண்டாலும் கொடுத்தே ஆகவேண்டும். ஒட்டுமொத்த சந்தையை கட்டுக்குள் வைத்திருக்கும் சில கோழி வியாபாரிகளிடம் அவன் சிறைப்படுவான். கோழி வளர்ப்பவன் கடனாளியாகவும் கோழியை வாங்கி விற்பவன் பெரிய வீடும் காருமாக வாழ்வதன் இரகசியம் இதுதான்.

அட போகட்டும் நாங்கள் நாட்டுக்கோழியை வளர்த்தால் இந்தப்பிரச்சினை இல்லை. அவை எத்தனை மாதங்களாயினும் நிற்கும் திறந்து வளர்க்கலாம் கண்டதையும் தின்று வளரும் அதிகமாக வளர்த்தால் தீவனமாக நெல், தவிடு, பிண்ணாக்கு என மிக அரிதான கலவைகளை வைத்தே பாதுகாக்கலாம் என்று நினைத்தால் அதிலும் விழுந்தது பேரிடி.

கிளிநொச்சியில் நெல்லின் விலை எட்டாயிரத்து நாநூறு ரூபா. இதேசமயம் கோழித்தீன் ஐம்பது கிலோ பதினோராயிரம் ரூபா. சரி யாராவது நெல் விதைத்த விவசாயிகளிடம் கேட்டால் மலிவாக வாங்கலாமே என்று ஒரு விவசாயியிடம் கேட்டோம். அவர் "வெள்ளை நெல்லுத்தான் இருக்கு பத்தாயிரத்து இருநூறு" என்றாரே பார்க்கலாம். இப்ப சொல்லுங்க சாதாரண மக்களால் எப்படி கோழி வளர்க்க முடியும். அரிசி விலை சரிந்துள்ளது. நெல்லின் விலை எப்படி இவ்வளவு உயரத்தில் நிற்கிறது. அதைவிட்டால் அவல் கடலை, சோயா, நூடுல்ஸ் என்பவை உழுத்த பின் மில்லில் அரைக்கப்பட்டு அவை விற்கப் படுகின்றன.

இதை எந்த பரிதாபத்துக்குரிய பிராணி உண்ணப்போகிறதோ யாமறியோம் ஆனால் அவை விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. ஏன்னவோ சொல்வார்களே ஆலையில்லாத ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை என்று. தரமற்ற இவற்றுக்கெல்லாம் கட்டுப்பாடும் இல்லை. விலைப்பட்டியலும் இல்லை. நாங்கள் எழுதிக் கொண்டிருக்கிறோம் அதுவும் ஏனென்று எமக்கே தெரியவில்லை இதனால் ஏதும் பயன் விளையுமா? அதையும் யாமறியோம்.

கஷ்டப்பட்டு அசோலாப்பாத்திகளையும் தவிட்டையும் முகப்பொலிகளையும் நம்பி வளர்த்த கோழிகள் விற்பனைக்குத்தயாரானபோது அதன் விலையேற்றமானது மக்களின் பாவனையை குறைத்துள்ளது. நாட்டுக்கோழி சாதாரணமாக சராசரி ஒரு சேவல் நாலாயிரம் ரூபாவுக்கு வந்துள்ளது. அந்த விலைக்கு கறி செய்து சாப்பிட யாருக்கும் வசதியில்லை. அதேயளவுக்கு ஒரு கிலோ மாட்டிறைச்சி ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பது ரூபாவாகும். புறொய்லர் கோழி ஆயிரத்து நாநூறு ரூபாவாகவும் விற்பனையாகிறது.



மக்கள் தமது தேவைகளைக் குறைத்துவிட்டனர். போசாக்கான உணவுகளை உண்பது அருமையாகி வருகிறது. சாதாரணமாக வீடுகளில் வாரம் ஒருமுறையாவது இறைச்சி, மீன் என வாழ்ந்தவர்கள். இப்போது மாதமொரு முறையாக மாற்றியிருக்கிறார்கள். இதில் இன்னுமொரு நற்செய்தி என்னவெனில் வைத்தியசாலை முகாம்களில் நோயாளர் தொகை குறைந்துள்ளது. ஒன்று பயணச்செலவை குறைக்கு முகமாக சின்னச்சின்ன பிரச்சினைக்கெல்லாம் வைத்தியசாலைக்கு வருவோர் இப்போது ஓரளவுக்கு வீட்டுவைத்தியத்தையும் நம்புகிறார்கள். எனினும் வீரியமான உழைப்போர் சமுதாயம் எதிர்காலத்தில் கேள்வியாகப் போகிறது.

தொழில் செய்து வாழக்கூட முடியாத நிலையை தோற்றுவித்துள்ள பொருளாதார நிலை இனி திருந்துமா என்று தெரியவில்லை. ஒருகாலத்தில் வீட்டுக்கொன்றிரண்டு பசுமாடு. நாலு ஆடுகள். பத்துப்பதினைந்து கோழிகள் என வாழ்ந்தோமே அது நினைவுக்கு வருகிறது. அப்போது நமது தோட்டப் பயிரின் கழிவுகளை எமது வளர்ப்பு பிராணிகளும் அவற்றின் கழிவுகளை எமது தோட்டங்களும் உண்டு வாழ்ந்தன. யாருக்கும் நட்டமில்லை இன்று எமது தேவைகளையும் பெருக்கி வைத்துள்ளோம். உண்பதும் உறங்குவதும் பாடுவதும் ஆடுவதும், விளையாடுவதும் எல்லாமே நாமாக வாழ்ந்தோம் அது இனி முடியாது. பாடவும் ஆடவும் மட்டுமல்ல

> மக்கள் தமது தேவைகளை குறைத்துவிட்டனர். போசாக்கான உணவுகளை உண்பது அருமையாகி வருகிறது. சாதாரணமாக வீடுகளில் வாரம் ஒருமுறையாவது இறைச்சி, மீன் என வாழ்ந்தவர்கள். இப்போது மாதமொரு முறையாக மாற்றியிருக்கிறார்கள். இதில் இன்னுமொரு நற்செய்தி என்னவெனில் வைத்தியசாலை முகாம்களில் நோயாளர் தொகை குறைந்துள்ளது. ஒன்று பயணச்செலவை குறைக்கு முகமாக சின்னச் சின்ன பிரச்சினைக்கெல்லாம் வைத்தியசாலைக்கு வருவோர் இப்போது ஓரளவுக்கு வீட்டுவைத்தியத்தையும் நம்புகிறார்கள்.

எமது தேவைகளையும் எமது மண்ணுக்கு அப்பால் கொண்டு சென்றிருக்கிறோம். இனி நாம் வாழப் பல நாடுகளின் அனுசரணை வேண்டும் என்றாகிவிட்டது.



- பெஞ்சமின் ஹார்டி -

# வாழ்க்கையில் வெற்றி பெற மனஉறுதி மட்டும் போதுமா?

மன உறுதி இருந்தால் வானத்தைக் கூட வில்லாய் வளைத்து விடலாம் என்று பெரியவர்கள் நம்பிக்கை தருவதைப் பார்த்திருப்போம். ஆனால், மன உறுதி மட்டுமே ஒருவருக்கு வெற்றியைக் கொண்டுவந்து சேர்க்காது என்ற நச்சென்ற வாக்கியத்துடன் ஆரம்பிக்கிறது 'வில்பவர் டஸ்நாட் வொர்க்' (Willpower Doesn't Work) என்னும் புத்தகம். அமெரிக்காவில் உள்ள சௌத் கரோலினா மாகாணத்தில் வசிக்கும் பெஞ்சமின் ஹார்டி எழுதிய புத்தகம் இது.

'மன உறுதி இல்லாமல் வாழ்க்கையில் வெற்றி பெற முடியுமா? எடுத்த காரியத்தை எந்த இடையூறு வந்தாலும் தொடர்ந்து செய்து முடிக்க மன உறுதிதானே அவசியம் வேண்டும் என்கிறீர்களா?

நான் கேட்கும் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள். உங்களுடைய வாழ்நாளில் இதுவரை எத்தனை ஆயிரம் முறை உங்களுடைய வாழ்க்கையை மேன்மையடையச் செய்ய வேண்டும் என்று நினைத்து முயற்சிகளை எடுத்திருக்கிறீர்கள்..? எத்தனை புத்தாண்டு சபதங்கள்… இந்த வருடம் வாழ்க்கையைப் புரட்டிப்போடுகிற அளவுக்கு முன்னேற்றமான விஷயங்களைச் செய்து முடிக்க வேண்டும் என்று உறுதி எடுக்கிறோம். ஜனவரி போனா, பிப்ரவரி அவ்வளவு தானே. சபதமும் போய் விடுகிறதே! சில தடவை கொஞ்ச நாள்கள் மிகக் கடினமாக வெல்லாம் உழைத்திருப்போம். இலக்கை அடைய இன்னும் இன்னும் உழைக்க வேண்டும் என்ற நிலை தொடர்ந்து இருந்திருக்கும். ஆனால், நாள்பட நாள்பட முயற்சிகளைத் தொடராமல் விட்டிருப்போம்.

இப்படி பல முயற்சிகள் தோல்வி அடைந்த பிறகு, நம் வாழ்வில் முன்னேற்றம் வருவதற்குத் தடையாக இருப்பது நாம்தான் என முடிவு செய்து கொள்வோம். நமக்குப் போதிய மன உறுதி இல்லாமல் இருப்பதால்தான் இந்த நிலைமையில் உழல்கிறோம் என்று முடிவு செய்வோம். அவ்வளவுதான்… இதுக்கு மேல் ஒன்றும் செய்ய முடியாது. கையில் இருக்கும் வாழ்க்கையையாவது காப்பாற்றி வாழ்ந்துகொள்வோம் என்ற மனநிலைக்கு வந்திருப்போம். நாம் செய்துகொள்ளும் இந்தவித முடிவு எந்த அளவுக்குச் சரியானது..? வாழ்வில் முன்னேற்றம் தடைபட காரணம் நீங்கள் இல்லை" என்ற மாற்றுச் சிந்தனையைப் பல்வேறு அருமையான தர்க்கங்கள் மூலம் விளக்கும் ஆசிரியர் ஓர் உதாரணத்தையும் சொல்கிறார்.

"இன்றைக்கு பெரும்பான்மையானவர்கள் உடல் பருமன் குறித்து கவலைப்பட்டு ஏதாவது நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டே இருக்கின்றனர். இவ்வளவு முயற்சிகளுக்குப் பிறகும் பலருக்கு உடல் எடை குறைந்தபாடில்லை. ஜெனெடிக்ஸ், பர்சனாலிட்டி, மன உறுதியின்மை, மோசமான உணவு மற்றும் வாழ்க்கை முறை பழக்கங்கள் எனப் பல்வேறு காரணங்கள் உடல் பருமனுக்குக் கூறப்பட்டு வருகிற போதிலும், அவையெல்லாம் இதற்கு முக்கியமான காரணங்கள் இல்லை.

1800-களின் இறுதி மற்றும் 1900-களின் ஆரம்பத்தில் உலகம் தொழில்மயம் ஆனது. இந்த நிகழ்வு கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு மனிதர்களை நகரச் செய்தது. திறந்த வெளியில் வேலை செய்துகொண்டிருந்த மனிதர்கள் கட்டடங்களுக்குள் அமர்ந்து பணிபுரிய ஆரம்பித்தனர். அந்தந்த ஊரின் தட்பவெப்ப நிலைக்கேற்ப கிடைக்கும் உணவைச் சாப்பிட்டவர்கள் அவற்றைச் சாப்பிடுவதை விட்டுவிட்டு, பேக்கேஜ்டு உணவை சாப்பிட ஆரம்பித்தனர். தொழில் வளர்ச்சியால் சுற்றுச்சூழலும் மாறியது.

1980 மற்றும் 1990-களில் தொழில்நுட்பம் வளர ஆரம்பித்து, இன்றைக்கு உலகை தலைகீழாக அது புரட்டிப்போட்டுவிட்டது. இந்த மாறுதல்களை எல்லாம் எதிர்கொள்ளத் தகுதி பெற்றிடாத நாம், இந்தச் சூழல்கள் உருவாக்கும் டெக்னாலஜி விஷயங்கள், துரித உணவுகள், பரபரப்பான வேலை போன்ற பழக்கங்களுக்கு சுலபத்தில் அடிமையாகி விட்டோம். காலப்போக்கில் இந்தப் பழக்க வழக்கங்கள் மெள்ள மெள்ள கலாசார ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படுகிற விஷயங்களாகவும் ஆகிவிட்டன. இவைதான் மனிதர்களைத் தொடர்ந்து மன அழுத்தத்திலும் தூக்கமில்லாத நிலையிலும் இருக்க வைக்கின்றன. சரியோ தவறோ…

கிட்டத்தட்ட இந்த உலகில் வாழ வேண்டும் எனில், இவற்றை எல்லாம் செய்தேயாக வேண்டும் என்கிற நிலையில்தான் நாம் இருக்கிறோம்.

இப்படிக் கட்டாயங்கள் நிரம்பிய உலகத்தில் வெறும் மன உறுதியை வைத்துக் கொண்டு உடல் எடையைக் குறைப்பது சாத்தியமில்லை தானே... இதனால்தான் வெறும் மன உறுதி என்பது மட்டும் வெற்றிபெறப் போதாது என்கிறேன்" என்று கேட்கிறார் ஆசிரியர்.

'நம்முடைய கலாசாரத்தில் ஓர் அங்கமாகி நன்றாக ஊறிப்போன பழக்கங்களை விட்டு வெளியே வர வெறும் மன உறுதி மட்டுமே போதாது. பிழைப்பை ஓட்ட வேண்டுமே என்ற நிலையில் இந்தவித பழக்கங்கள் அவசியமானதாக இருக்கும்போது எப்படி ஒருவர் மன உறுதியை மட்டும் வைத்துக்கொண்டு மாறுதல்களைக் கொண்டு வர முடியும்?

இது போன்ற நிர்ப்பந்திக்கும் சூழ்நிலையில் இருக்கும்போது, நீங்கள் உங்களிடம் மாற்றத்தைக் கொண்டு வந்து வெளியேறுவது சாத்தியமே இல்லாத ஒரு விஷயம். மாறாக, நீங்கள் உங்களுக்கென ஒரு சட்ட திட்டம் கொண்ட சூழலை உருவாக்கி அதை மேலாண்மை செய்தால் மட்டுமே நினைத்ததை வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியும்" என்கிறார் ஆசிரியர்.

மன உறுதியைச் செயல்படுத்த நம்முடைய அகத்திலும் நாம் வாழும் புறத்திலும் தடைக் கற்கள் இருக்கின்றன. எனவே, மாற்றம் கொண்டு வர வேண்டும் என்று நினைத்தீர்கள் எனில், முதலில் உங்களைச் சுற்றியிருக்கும் சூழலை மாற்றுங்கள். ஏனென்றால், நாம் நம் சூழ்நிலைகளையே பின்பற்றும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளோம். உங்களுடைய சூழலை நீங்கள் மாற்றி அதை உங்களுடைய கட்டுக்குள் வைக்காவிட்டால், உங்களை அது கட்டுக்குள் வைத்துவிடும்.

மன உறுதி என்பது யாருக்கானது என்று கேட்டால், யாருக்கெல்லாம் எதை சாதிக்க வேண்டும், அடைய வேண்டும் என்பது தெரியாமல் இருக்கிறதோ, அவருக்கானது மட்டுமே. உடல் எடையும் கூடக் கூடாது குக்கீஸ்களையும் சாப்பிட வேண்டும்... வேலையை ஒழுங்காகச் செய்ய வேண்டும் யூடியூப் வீடியோ/ ஷார்ட்ஸ்/ அப்டேட் என அனைத்தையும் பார்க்கவும் வேண்டும்... குழந்தைகளுடன் நேரம் செலவிட வேண்டும் ஸ்மார்ட் போனையும் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும்... இது போன்ற ஒன்றுக்கொன்று முரண்பாடான இரண்டு விஷயங்களையும் மனதில் கொண்டிருப்பவர்களுக்கு மன உறுதி நிறையவே தேவை.

மன உறுதி என்பது நம்முடைய உடலில் இருக்கும் எனர்ஜியைப்போல. ஒரு நாள் ஓரளவுக்கு உழைத்த பிறகு அது காலியாகிவிடும். நாளின் இறுதியில் நாம் எனர்ஜி இல்லாமல் களைத்துப் போவது போல், மன உறுதியும் எள்ளளவும் இல்லாத நிலைக்கும் நாம் வந்து விடுகிறோம். இந்தச் சூழ்நிலையில், நாம் போட்ட திட்டங்களை எல்லாம் தூர எறிந்து விட்டு நேரத்தையும் ஆரோக்கியத்தையும் வீணடிக்கும் காரியங்களில் நம்மை அறியாமலேயே நாம் இறங்கிவிடுகிறோம்.

ஏன் ஒரு மனிதனுக்கு மன உறுதி வேண்டும்? மனிதர்களின் இயல்பைப் பார்ப்போம். ஒருவருக்கு என்ன வேண்டும் என்று தெரியாது. மனதினுள் முரண்பாடான நிலை இருக்கிறது. ஒருவர் எதை அடைய வேண்டும் என்று நினைக்கிறாரோ, அதை நோக்கி பயணிக்கும் விருப்பம் அவருக்கு குறைவாக இருக்கிறது. ஒருவருடைய கனவுகளை அடைய அவர் தேவையான முயற்சிகளை எடுக்காமல் இருக்கிறார். ஒருவர் இருக்கும் சூழல் அவருடைய இலக்குகளை அடைய தடைபோடுவதாக இருக்கிறது.

இந்த நிலையில், அவருடைய மனதில் விவாதங்களுக்கான களமே இருக்காது. ஏனென்றால், எல்லாமே குழப்பமும் தடைகளும் கொண்டதாக இருக்கின்றனவே! இதனால் எதிர்காலம் குறித்த எந்த முடிவையும் அவரால் எடுக்க முடியாமல் போகிறது. கேள்விகளுக்கே இடமிருக்காது. முன்னேற்றம் மாற்றம் எல்லாம் பேச்சில் மட்டுமே இருக்கும்.

குழப்பத்தினுள்ளேயோ குழப்பத்தின் ஓர் ஓரத்திலோ அவர் இருப்பார். ஓரத்தில் இருந்தால் வேலியைத் தாண்டி வருவதற்கான வாய்ப்புள்ளது. குழப்பத்தின் உள்ளே இருந்தால்..! இந்த இரண்டு நிலைகளிலுமே முடிவை எடுக்க மன உறுதி தேவைப்படுகிறது.

முடிவெடுக்கும் வரை மட்டுமே மன உறுதி தேவை. முடிவெடுத்த பிறகு, மன உறுதியை மட்டுமே வைத்துக்கொண்டு செயல்பட நினைத்தால் மிக மிகக் குறைந்த அளவிலான முன்னேற்றத்தை மட்டுமே அவரால் பெற முடியும். ஏனென்றால், இறங்கிய காரியத்தில் வெற்றியை அடைய உறுதியான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்" என்கிறார் ஆசிரியர்.

உறுதியான முடிவுகள்...

"உறுதியான முடிவுகள் எனில், அதற்கு என்னென்ன படிநிலைகள் இருக்கின்றன என்று கேட்பீர்கள். நிறைய நேரம், சிந்தனை, பணம் போன்றவற்றை முதலீடு செய்வது இதைத்தான் நான் செய்யப்போகிறேன் என்று உலகத்துக்குச் சொல்வது இந்தக் காலகட்டத்தில் இதைச் செய்து முடிப்பேன் என்ற கால அளவை நிர்ணயிப்பது எது, எப்படி, எப்போது செய்ய வேண்டும் என்று தீர்மானித்துக் காரியங்கள் எப்படிப் போகின்றன என்கிற பின்னூட்டங்களைத் தெரிந்துகொள்வது நம்முடைய செயல்பாட்டுக்குத் தடையாக இருக்கும் அனைத்து விஷயங்களையும் மாற்றுவது... இவை அனைத்தையும் செய்தால் மட்டுமே நாம் உறுதியான முடிவை எடுத்துப் பயணத்தை ஆரம்பித்துவிட்டோம் என அர்த்தம்.

எல்லாவற்றையும் தீர்மானித்து உலகுக்கு அறிவித்தும் விட்ட பிறகு, நம் இலக்கை நோக்கிய பயணத்தைத் தொடங்கி தொடர்வதைத் தவிர, வேறு வழி நமக்கு இல்லாமல் போகும். ஏனென்றால், அப்படி பயணிக்கா விட்டால் எக்கச்சக்கமான எதிர்வினைகளை நாம் எதிர்கொள்ள வேண்டி இருக்கும். இதுதான் நீங்கள் வெற்றி பெறுவதற்காக நீங்களே உருவாக்கும் சூழல்.

நீங்கள் உருவாக்கிய இந்தச் சூழல் உங்களை சும்மா இருக்கவிடாது. உதாரணமாக, நீங்கள் வேலையில் சிரத்தையுடன் இருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களா? மனச் சிதறலுக்கான வாய்ப்பு இல்லாத சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ளுங்கள். ஆரோக்கியமான உணவை மட்டுமே சாப்பிட வேண்டும் என்று நினைக்கிறீர்களா? உடலுக்குக் கேடான உணவுப் பொருள்களை உங்கள் வீட்டிலிருந்து ஒழித்துக்கட்டுங்கள். கிரியேட்டிவ்வான விஷயங்களைச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்களா? நீங்கள் வசிக்கும் நகரத்தை விட்டு ஓரிரண்டு நாள்கள் வெளியேறுங்கள்.

வெற்றியானாலும், தோல்வியானாலும் அதில் உங்களுக்கு அதிக பொறுப்பு இருக்கும் காரியங்களை ஏற்றுக்கொள்ளுங்கள். சூழலே வெற்றிக்கு வழிவகை செய்யும். உதாரணமாக, சுற்றியிருக்கும் நபர்கள் மாறும்போது சிந்தனைகளும் மாறும். இது உங்கள் முன்னேற்றத்துக்கு வழிவகை செய்யும். அது மட்டுமல்லாமல், இன்னமும் உங்கள் சூழலை மேம்படுத்தவும் செய்யும். சூழல் என்பது உங்களிடம் இருந்து அதிகமான விஷயங்களை எதிர்பார்க்கும் அளவுக்குக் கட்டமைக்கப்பட்டுவிட்டால் தானாகவே அது உங்களுடைய வெற்றிக்கு வழிவகை செய்யும்.

ஏனென்றால், கட்டாயத் தேவை என்பது சூழ்நிலையில் இருந்தே உருவாகிறது. ஒருவருடைய புத்திசாலித்தனத்தையோ, தலைமைப் பண்பையோ தாண்டிக் கட்டாயத் தேவையே அவருடைய வெற்றிக்கான சிறந்த ஃபார்முலாவாக இருக்கிறது" என்று முடிக்கிறார் ஆசிரியர்.

மூன்று பெரும்பிரிவுகளாகப் பிரித்து எழுதப் பட்டுள்ள இந்தப் புத்தகத் தில் எப்படி ஒருவருடைய சூழல் அவரை உருவாக்குகிறது, மன உறுதி என்பதை எப்படி தேவை அற்ற ஒரு விஷயமாக ஆக்கிக்கொள் வது, எப்படி உயர் செயல்திறன் மற்றும் வெற்றியை அவுட்சோர்ஸ் செய்வது என்று ஆசிரியர் எளிமையாக விளக்கியுள்ளார். வெற்றி பெற நினைக்கும் அனைவரும் இந்தப் புத்தகத்தைப் படித்துப் பயன் பெறலாம்.

# வெற்றிக்கு வழிவகுக்கும் தெளிவான சிந்தனைகள்




- ஷான் பாரீஷ் -

> “நிஜமாகவே ஒரு சில மனிதர்கள் அதீத புத்திசாலிகளாக இருக்கிறார்களா? அல்லது அவர்கள் முடிவெடுக்க பயன்படுத்தும் நடைமுறைகள் சிறந்தவையாக இருக்கின்றனவா, சிந்தித்து முடிவெடுப்பதில் தவறுகள் நடக்காமல் பார்த்துக் கொள்வது எப்படி? அல்லது தவிர்ப்பது எப்படி? என்பதை எல்லாம் தொடர்ந்து நான் பார்த்து வந்தேன்.”

ஏன் மனிதர்கள் தவறான முடிவுகளை எடுக்கின்றனர்? எப்படி ஒரே மாதிரியான தகவல்களை வைத்துக்கொண்டு சிலர் மட்டும் பெரும்பாலான சமயங்களில் சரியான முடிவுகளை எடுக்கின்றனர்? நாமும் பெரும்பாலான சமயங்களில் சரியான முடிவுகளை எடுப்பது அல்லது மோசமான விளைவுகளை உருவாக்கும் முடிவுகளைத் தவிர்ப்பது எப்படி? அதிர்ஷ்டத்தை நம்பி இருக்காமல், அறிவுபூர்வமாக யோசித்து சரியான முடிவை எடுப்பது எப்படி?

இது போன்ற பல்வேறு கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது ‘கிளியர் திங்கிங்’ (Clear Thinking) என்னும் புத்தகம். கனடா நாட்டைச் சார்ந்த ஷான் பாரீஷ் என்பவர் எழுதிய புத்தகம் இது.

“தெளிவாகச் சிந்தித்து முடிவெடுப்பது எப்படி? என்பது குறித்து நமக்கு யாரும் சரியாக சொல்லித் தருவதில்லை. ‘தெளிவாக முடிவெடுப்பது எப்படி என்பதை அவரவராகவே கற்றுக் கொள்ள வேண்டும் அல்லது அடிபட்டு உதைபட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்’ என்றுதான் இந்த உலகமே எதிர்பார்க்கிறது.

இது குறித்து தீவிரமாகச் சிந்தித்தால் ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது. தெளிவாகச் சிந்திப்பது எப்படி என்பதைக் கற்றுக் கொள்வது மிகவும் கடினமான ஒன்று. பல ஆண்டுகள் முயற்சி செய்து தெளிவாகச் சிந்திப்பது எப்படி? என்று கற்றுக் கொண்டேன். மனிதர்கள் எப்படி தகவல்களைப் பெறுகின்றனர், அந்தத் தகவல்கள் குறித்த அர்த்தங்களை எப்படிப் புரிந்து கொள்கின்றனர், புரிந்துகொண்டதை வைத்து என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கின்றனர், அவர்களுடைய நடவடிக்கைகள் வெற்றியாகவும் தோல்வியாகவும் எப்படி முடிவடைகிறது என்பது குறித்து தீவிரமாகக் கண்காணித்தேன்.

நிஜமாகவே ஒரு சில மனிதர்கள் அதீத புத்திசாலிகளாக இருக்கிறார்களா அல்லது அவர்கள் முடிவெடுக்க பயன்படுத்தும் நடைமுறைகள் சிறந்தவையாக இருக்கின்றனவா, சிந்தித்து முடிவெடுப்பதில் தவறுகள் நடக்காமல் பார்த்துக் கொள்வது எப்படி? அல்லது தவிர்ப்பது எப்படி? என்பதை எல்லாம் தொடர்ந்து நான் பார்த்து வந்தேன்.

பல்வேறு மூத்த அலுவலர்களைக் கண்காணித்து எப்படி அவர்கள் கூட்டங்களில் பேசுகின்றனர், அவர்கள் எதை முக்கியமானதாகக் கருதுகின்றனர் என்பதைக் கூர்ந்து கவனித்தேன். தொழில்துறையில் மற்றவர்கள் தவறுகளைச் செய்தபோதிலும், சரியான முடிவுகளை எடுத்து பெருவெற்றி பெற்றவர்களைப் பார்த்து ஏனையவர்களுக்குத் தெரியாத ஏதோ ஒன்று அவர்களுக்குத் தெரிந்துள்ளதே, அது என்ன என்பதைக் கண்டுபிடிக்க முயன்றேன். கடைசியில் நான் கண்டுபிடித்தது என்ன தெரியுமா?

நம்மில் பெரும்பாலானோர் வெற்றியைத் துரத்திச் செல்லும்போது, தலைசிறந்த மனிதர்கள் தோல்வியைத் தவிர்ப்பது எப்படி என்பதை மிகத் தெளிவாகத் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தனர். இது ஆச்சரியமளிக்கும் சிறந்த உபாயமாக எனக்குப் பட்டது.

தெளிவான முடிவுகளை எடுப்பது குறித்து பல்வேறு முன்னணி வெற்றியாளர்களிடமும் பேசியுள்ளேன். இவற்றிலிருந்து நான் தெரிந்து கொண்டது என்ன தெரியுமா?

நம்முடைய எண்ணம், உணர்வு மற்றும் நடவடிக்கை இந்த மூன்றையும் நாம் முடிவு எடுக்கப்போகும் காரியத்தில் மட்டும் குவிக்க வேண்டும். ஏன் இந்தக் காரியத்தை செய்ய வேண்டும் என்பதற்கான காரணங்களைப் புரிந்துகொள்ள வசதியான அளவுக்கு நேர இடைவெளியை ஒதுக்க வேண்டும். அந்த நேரத்தை நாம் தெளிவாகச் சிந்திப்பதற்காக உபயோகிக்க வேண்டும். தெளிவான சிந்தனையின் மூலம் எடுக்கப்படும் முடிவுகள் நம்மை சிறப்பான முடிவுகளை எடுக்க வைக்கும் வாய்ப்பை அதிகரிக்கும். அந்த மாதிரியான சிறப்பான பல முடிவுகள் ஒன்று சேர்ந்துதான் நம்மை வெற்றிப்பாதையில் பயணிக்க வைக்கும்” என்று சொல்லும் ஆசிரியர், அதற்கான பல்வேறு வழிமுறைகளையும் விளக்குகிறார்.

“நம் வாழ்வில் முக்கியமான முடிவுகளை எடுக்கும்போது மட்டுமே நாம் கவனத்துடன் இருக்க வேண்டும் என்று சிறுபிராயம் முதலே நமக்குச் சொல்லித் தந்திருக்கிறார்கள். ஆனால், நம் வாழ்வில்

நாம் முக்கியமான முடிவுகளை எடுக்கிறோம் என்று உணராத மிக மிகச் சிறிய தருணங்களே முக்கியமான முடிவுகளை எடுக்கும் தருணங்களைவிட நம் வெற்றியில் அதிக அளவிலான பங்களிப்பைத் தரும் தருணங்களாக இருக்கின்றன. நாம் இந்த சின்னச் சின்ன தருணங்களை சரியாகக் கையாண்டுவிட்டால் நம் பெரிய வெற்றிக்கு அவை வழிவகை செய்யும்.

கேட்பதற்குச் சுலபமாக இருந்தாலும் சின்னச் சின்ன தருணங்களை சரியாகக் கையாள்வது சாதாரண விஷயமல்ல. உதாரணமாக, சரியான துணையைத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்தால் மிகவும் வெற்றிகரமான வாழ்க்கை அமையும். சரியான தொழிலைத் தேர்வு செய்தால், நம் வாழ்க்கை வெற்றிகரமானதாக இருக்கும். சரியான முதலீட்டைத் தேர்வு செய்தால் நமக்கு அதீத இலாபம் கிடைத்து நாம் பெரிய செல்வந்தராக ஆவோம் என்றெல்லாம் நாம் நினைக்கிறோம்.

இந்த உலகத்திலேயே மிகச் சிறந்த நபரை திருமணம் செய்துகொள்கிறோம் என்றே வைத்துக்கொள்வோம். அவரை சரியான விதத்தில் மதித்து நடத்தாமல் ஏனோதானோ என்று நடத்தினால் விவாகரத்துதானே நடக்கும்? சிறப்பான தொழிலைத் தேர்வு செய்துவிட்டு, வேலை செய்யாமல் இருந்தால் முன்னேற்றம் வருமா? ஆக, போகிற திசைகள் சரியாக இருந்தாலும், விளைவுகள் நாம் எதிர்பார்க்கும் அளவுக்கு இல்லாமல்போகும் இல்லையா?

இதைத்தான் மிகச் சிறிய தருணங்களில் நாம் கவனம் செலுத்த வேண்டும் என்கிறேன். இன்றைய ஒவ்வொரு கணத்தையும் கையாள எந்த மாதிரியான நிலைப்பாட்டை நாம் எடுக்கிறோம் என்பதில்தான் நம் வெற்றி, தோல்வி தீர்மானிக்கப்படுகிறது" என்று விளக்கமாக எடுத்துச் சொல்கிறார் ஆசிரியர்.

## சிந்தித்து முடிவை எடுங்கள்

"நாம் இப்போது எடுக்கும் சிறந்த நிலைப்பாடு என்பது நம்மை சூழ்நிலைக் கைதியாக்காமல் தெளிவாகச் சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்து முடிவெடுக்க வைக்கும் வகையிலானதாக இருக்கும். இந்த உலகில் இருக்கும் ஒவ்வொரு முக்கியமான நபருமே தங்களுடைய வாழ்வில் ஒவ்வொரு கணத்தையும் சூழ்நிலையின் அழுத்தத்தைக் கொண்டு முடிவெடுக்காமல் தெளிவான சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு முடிவெடுத்தவர்களாகவே இருக்கின்றனர்.

மற்றவர்களை வெற்றி பெற நாம் மிகவும் ஸ்மார்ட் ஆனவர்களாக இருக்கத் தேவை இல்லை. நாம் எடுக்கும் நிலைப்பாடு சிறந்ததாக இருந்தால் மட்டுமே போதும். ஏனென்றால், எவ்வளவு ஸ்மார்ட்டான நபருமே எந்த ஒரு விஷயத்திலும் தெளிவான சிந்தனை இல்லாத நிலைப்பாட்டை எடுத்துவிட்டால், அதில் தோல்வி அடைவதற்கான வாய்ப்பு அதிகம்.

சரியான நிலைப்பாட்டை எடுக்கும் முட்டாள்கூட அந்தச் சூழ்நிலையில் அறிவாளியாகவே செயல்படுவார். அதே சமயம், தவறான நிலைப்பாட்டை எடுக்கும் ஸ்மார்ட்டான நபர் ஒரு முட்டாளைப் போன்றே செயல்படுவார். காலமும் சரியான நிலைப்பாட்டை எடுக்கும் நபருக்கு நண்பனாகவும் தவறான நிலைப் பாட்டை எடுக்கும் நபருக்கு எதிரியாகவும் செயல்படவே செய்கிறது. மேலும், பெரும் பாலானவர்கள் சரியான நிலைப்பாட்டை எடுக்கத் தவறுவதால், சரியான நிலைப்பாட்டை எடுப்பவருக்கு வெற்றி என்பது சுலபமாகிறது" என்று சொல்லும் ஆசிரியர், தெளிவான சிந்தனையைத் தடுப்பது எது எனச் சுட்டிக் காட்டுகிறார்.

தெளிவான சிந்தனைக்கான எதிரிகள்

"மோசமான சிந்தனை கொண்டிருப்பது அல்லது சிந்திக்காமலேயே செயல்படுவது மற்றும் பகுத்தறியும் குணத்தைப் பயன்படுத்தாமல் இருப்பது என்கிற இரண்டும் இதில் முக்கியமான பங்கை ஆற்றுகின்றன. எந்தவொரு காரியத்திலும் சிந்திக்கவும் பகுத்தறியவும் அதற்கான இடம் (கால இடைவெளி) வேண்டும். இதனாலேயே நாம் மிகவும் முனைப்புடன் ஒவ்வொரு விஷயத்திலும் இதற்கான கால இடைவெளியை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

உணர்ச்சி (எதிர்கொள்ளும் சூழ்நிலையில் உணர்ச்சிவயப்படுவது), அகம்பாவம், சமூகம் (நம்மை சார்ந்த கூட்டம் எப்படி செயல்படுகிறது) சார்ந்து, செயல்படுவதற்கு நம்மிடம் இருக்கும் தயக்கம் போன்றவற்றில் நம்முடைய இயல்பு நிலை (Default setting) எது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால், நம்முடைய இயல்பு நிலையை முழுமையாக நாம் புரிந்து கொண்டால் மட்டுமே அதில் எந்த மாதிரியான மாற்றங்களை நாம் கொண்டு வர வேண்டும் என்பதை நம்மால் கண்டறிய முடியும்.

நம்மால் நம்முடைய இயல்புநிலையை ஒட்டுமொத்தமாக மாற்றியமைக்க முடியாது. என்றாலுமே ஓரளவுக்கு மாற்றியமைத்து மீதியிருப்பதை அனுசரித்து நம்முடைய திட்டங்களையும் நடைமுறைகளையும் நாம் ஏற்படுத்திக்கொள்வதே சிறப்பான செயல்பாடாக இருக்கும்.

இதற்கெல்லாம் முதலில் நம்மைப் பற்றி நமக்கு சரியான மற்றும் நியாயமான புரிதல் இருக்கவேண்டும். குறிப்பாக, நம் பலம் மற்றும் பலவீனம் குறித்த புரிதல்கள் அவசியம். இதைச் சுலபமாக்க ஒரு வழி இருக்கிறது. ஒரு நாளில் எத்தனை முறை நீங்கள், 'எனக்கு இது தெரியாது' என்று நினைக்கிறீர்கள் அல்லது கூறுகிறீர்கள் என கணக்கிட்டுப் பாருங்கள். எதையெல்லாம் தெரியாது என நினைக்கிறீர்களோ அவற்றைக் குறித்துக்கொள்ளுங்கள். நீங்கள் 'தெரியாது' என நினைப்பது சொல்வதையெல்லாம் தெரிந்துவைத்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள். அதுவே நம் வெற்றிக்கு வழி செய்யும். வெற்றி பெற நினைத்து அதற்கான முயற்சியை நாம் செய்யும்போது தெரியாதவற்றை தெரிந்துகொள்ள நிச்சயம் முயல்வோம்.

நிஜமாகவே, நமக்கு எக்கச்சக்கமான விஷயங்கள் அத்துப்படியாக இருக்கின்றன என வைத்துக் கொள்வோம். வெறும் அத்துப் படியாக இருப்பதில் எந்தவிதமான உபயோகமும் இல்லை. எப்படி அந்த அறிவைப் பயன்படுத்துகிறோம் என்பதில்தான் இருக்கிறது நம் வெற்றி. அதே போல்தான், நம் சுயகட்டுப்பாடும். சுயகட்டுப்பாடு என்பது இங்கே நம்முடைய பயங்கள், ஆசைகள் மற்றும் ஏனைய உணர்ச்சிகளைக் குறிக்கிறது. ஒரு விஷயம் குறித்து நாம் என்ன நினைக்கிறோம் என்பதும், என்ன செய்கிறோம் என்பதும் சுயகட்டுப்பாட்டின் கீழே வருகிற விஷயங்களாக இருப்பதால், இதுவும் மிக மிக முக்கியமான ஒன்றாகிறது.

இதற்கு அடுத்தபடியாக வருவது, தன்னம்பிக்கை. ஒரு காரியத்தில் வெற்றி பெறுவதைப் பொறுத்தவரை, யார் சரி என்பதைவிட எது சரி? என்பதைச் சிந்தித்துச் செயல்பட தன்னம்பிக்கை மிக மிக அவசியமான ஒன்றாக இருக்கிறது. ஏனென்றால், தன்னம்பிக்கைதான் உலக நிதர்சனத்தை எதிர்கொள்ளத் தேவையான துணிச்சலை நமக்கு அளிக்கிறது. இது தான் தவறைத் தவறென்று ஒப்புக்கொள்ளவும், சரியான விஷயங்களுக்காக மனதை மாற்றவும் உதவுகிறது" என்கிறார் ஆசிரியர்.

இது தவிர, எப்படி நம் பலவீனங்களை சரிசெய்து தற்காத்துக்கொள்வது, எப்படி தவறுகளைக் கையாள்வது போன்றவற்றையும் எளிய உதாரணங்கள் மூலம் விளக்குகிறது இந்தப் புத்தகம். எப்படி தெளிவாகச் சிந்தித்து நடவடிக்கைகளை எடுப்பது என்பது குறித்து விளக்கும் இந்தப் புத்தகம், ஒரு பிரச்சினையை எப்படி வரையறுப்பது, எப்படி அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பல்வேறு விதமான தீர்வுகளைக் கண்டறிவது, எப்படி அந்தத் தீர்வுகளை சீர்தூக்கிப் பார்த்து எது சரியென்று தேர்ந்தெடுப்பது? தேர்வுசெய்த தீர்வை எப்படி நடைமுறைப்படுத்துவது எனப் பல்வேறு கேள்விகளுக்கும் பதில் தருகிறது.

வாழ்வை வரையறை செய்வதாக நாம் நினைக்கும் நிகழ்வுகளைவிட (வீடு வாங்குதல், பதவி உயர்வு பெறுதல் போன்றவை), நம் வாழ்வில் நாம் கடந்து செல்லும் சின்னச் சின்ன தருணங்களே நம்மை அதிக மகிழ்ச்சிக்கு உள்ளாக்குவதாக இருக்கின்றன என்பதையும் நாம் நினைவு கொண்டு செயல்பட வேண்டும் என்ற கருத்தை அழுத்தமாகச் சொல்லும் இந்தப் புத்தகத்தை வெற்றிபெற துடிக்கும் அனைவரும் படித்துப் பயன்பெறலாம்.

தமிழர் பொருணமியம் வாரமலர் TAMILS ECONOMY



புதன்கிழமை
01.11.2023

# பால் மா உற்பத்தியும் மனித நுகர்வும்



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்





இந்த வாரம் முதல் பால் மா உற்பத்தி மற்றும் அதன் நன்மை தீமைகள் சர்வதேச மற்றும் உள்ளூர் விற்பனை, சந்தை, நுகர்வு தொடர்பாக ஆராயப்போகிறேன்.

இலங்கை மக்களில் பெரும்பாலான வர்களின் காலைத் தேநீரில் பால் சேர்க் கப்படுகிறது. எனினும் அது பொதி செய்யப் பட்ட பால் மா வடிவிலேயே சேர்க்கப்படு கிறது. திரவப் பால் வடிவில் அது சேர்க்கப் படுவது குறைவு. அதற்கு பல காரணங்கள் உள்ளன. இந்தத் தொடரில் அது தொடர் பான விடயங்களும் வரும். இலங்கையில் நுகரப்படும் பால் மா பெரும்பாலும் நியூசி லாந்து போன்ற நாடுகளில் இருந்து இறக்கு மதி செய்யப்பட்டே உள்ளூர் சந்தைக்கு விநியோகிக்கப்படுகிறது.

பால் மா இறக்குமதிக்கே பல பில்லியன் டொலரை வெளிநாடுகளுக்கு வழங்க வேண்டியிருக்கிறது. இது நாட்டின் அந்நிய செலவாணிக் கையிருப்பில் கணிசமான பாதிப்பைத் தருகிறது. Hiland, பெலவத்தை போன்ற உள்ளூர் பால் மா நிறுவனங் கள் தமது உற்பத்திகளை உள்ளூர் சந் தைக்கு விநியோகிக்கின்றபோதும் அவை நியூசிலாந்தின் fontera நிறுவன பால் மா உற்பத்திகளை விட மிக மிக குறைவே. மக்களும் உள்ளூர் உற்பத்திகளை விட வெளிநாட்டு இறக்குமதிக்கே அதிக விருப் பத்தைக் கொண்டுள்ளனர். சில படித்த சிங்கள தேசிய உணர்வுள்ள மக்கள் மாத் திரமே இலங்கையின் உள்ளூர் பால் மாவை வாங்குவதைக் காணமுடிகிறது. அவை உள்ளூரின் சகல இடங்களிலும் கிடைப்பது குறைவு என்பதோடு வெளி நாட்டுப் பால் மா வகைகள் கிராமத்தின் பட்டி தொட்டி எங்கும் கிடைப்பது கிராம மக்களையும் அவற்றை நோக்கி நகர்த்து கிறது.

சில வருடங்களாக அரச அனுசரணை யுடன் பாடசாலை மாணவர்களுக்கு திரவ பால் நுகர்வு தொடர்பாக விழிப்பணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகிறோம். இதன்போது திரவப் பாலையும் வழங் குவோம். இதன்போது அவதானித்த முக் கிய விடயம் கறவை மாடுகள் வைத்தி ருக்கும் பண்ணையாளர்களின் பிள்ளை கள் கூடப் பால் பவுடரை விரும்புவதை. அதாவது பாலை கறந்து நிறுவனங்க ளுக்கு கொடுத்து விட்டு விலை கொடுத்து பால் மாவை வாங்குகின்றனர். பல பிள் ளைகள் வெளிநாட்டு நிறுவனங்களின் பால் மாவை விரும்பி அருந்துவதோடு பசுப்பாலை வெறுப்பதையும் காண முடிகி றது. பசுப்பாலின் சுவை குறைவாகவும் ஒருவித மணம் வீசுவதாகவும் சளி பிடிப் பதாகவும் காரணம் சொல்கிறார்கள். இது இப்படியிருக்க, பிறந்த குழந்தைகளுக்கு தாய்ப்பாலை நிறுத்தி முற்று முழுதாக பால் மாவுக்கு மாறிய நிலையையும் அவதா னிக்க முடிகிறது. இந்த கட்டுரை இந்த விட யங்களை பிணக் கூராய்வு செய்வது போல பல விடயங்களை ஆராயப் போகிறது. நல் லது கெட்டதுகளை வெளிப்படுத்தப் போகி றது.

விலங்குகளின் பாலைக் கறந்து அருந் திய மனிதன் மித மிஞ்சிய பாலைச் சேமிக்க வேண்டிய தேவை ஏற்பட பல வழிமுறை களை கையாளத் தொடங்கினான். அதில் ஒரு முறைதான் பாலின் தண்ணீரை அகற்றி அதனைச் சேமித்தலாகும். (பாலில் 80% வரை தண்ணீர்தான் உள்ளது என்ப துடன் பாலிலுள்ள தண்ணீர் பல நுண் ணங்கிகள் வளரக் கூடிய ஊடகமாக உள் ளது ). வரலாற்றில் ஆசிய, மத்திய கிழக்கு









பகுதிகளில் சூரிய ஒளியில் நீரை ஆவியாக்கி பாலை சில காலம் பழுதடையாமல் சேமித்தமைக்கான குறிப்புகள்கிடைத்திருக்கின்றன.

19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் நவீன பால் மாவின் தொடக்கம் ஆரம்பமாகியது.

1802 ம் ஆண்டளவில் பிரான்ஸ் Francois appert என்பவர் தகரத்தில் அடைத்து பாலைச் சேமித்திருக்கிறார். 1864 இல் Gail borden என்பவர் செறிவூட்டிய (condensed milk) பாலை உற்பத்தி செய்திருக்கிறார். இவ்வாறான நடவடிக்கைகள் நவீன பால் சேமிப்பு மற்றும் பால் பவுடர் உற்பத்திக்கு வழி கோலின.

19ஆம் நூற்றாண்டின் கடைசியில் சூடான இடத்தினூடு பாலைச் செலுத்தி பாலின் நீர்த்தன்மையை இழக்கச் செய்யும் யுக்தி பயன்படுத்தப்பட்டது. அதன் பின் பல நவீன தொழில் நுட்ப மாற்றங்கள் நிகழ்ந்து இன்றைய நவீன spray drying முறை உருவாகியது எனலாம்.

ஆம் உலக போர் காலத்தில் பால் மாவின் தேவை கணிசமாக உணரப்பட்டது. யுத்த முனைக்கு திரவப் பாலை கொண்டு செல்வதைவிட பால்மாவாக கொண்டு செல்வது இலகுவாக இருந்தது என்பதுடன் நீண்ட நாட்களுக்கும் அதனை கெடாமல் பாதுகாக்க முடிந்தது.

உலகப் போரின் பின் குழந்தைகளின் மாற்று உணவாக பால் பயன்படத் தொடங்கியது. பல நாடுகளில் குழந்தைகளுக்கான பால் உணவுகள் தயாரிக்கப்பட்டன. மிதமிஞ்சியவை ஏற்றுமதியும் செய்யப்பட்டன.

இலங்கையும் ஆரம்ப காலத்தில் முற்று முழுதாகவே திரவப் பாலை நுகரும் நாடாகவே இருந்தது. பல வெளிநாடுகளின் பல்தேசிய நிறுவனங்கள் ஆரம்பத்தில் இலவசமாக பால்மாவை வழங்கின. குறிப்பாகக் குழந்தைப் பால் மா. இதற்காக கடுமையான பணச் செலவுடன் விளம்பரங்கள் போட்டு மக்களிடம் பால் மா உற்பத்திகளை கொண்டுபோய் சேர்த்தனர். இதன் காரணமாக மக்கள் திரவப் பால் நுகர்வைக் கைவிட்டுப் பால் மா நுகர்வுக்கு அடிமையாகினர். இலங்கையின் பால் பண்ணைத் துறையும் வெளிநாடுகளில் தங்கியிருக்கும் வகையாக மாறியது. இன்றும் அந்த நிலை தொடர்கிறது.

இந்தியாவுக்கும் இதேபோன்று பல பல்தேசிய நிறுவனங்கள் இலவசமாக பால்மாவை வழங்கியபோதும் அதை நேரடியாக மக்களுக்கு இலவசமாக வழங்காமல் தமது பால்க் கட்டமைப்பு வலையமைப்பின் ஊடாக திரவப் படுத்தியே வழங்கினர். (இது தொடர்பாக வர்கீஸ் குரியன் அவர்களின் I too had a dream சுயசரிதையின் ஊடாக அறிந்து கொண்டேன்). இதன் காரணமாக அவர்கள் இன்றும் தன்னிறைவாகவே உள்ளனர்.

இப்படியாக, இனிவரும் வாரங்களில் பால் மாவின் பல விடயங்களைத் தொடர்ந்து ஆராய்வோம்.

**“இலங்கை ஆரம்பக் காலத்தில் முற்று முழுதாகவே திரவப் பாலை நுகரும் நாடாகவே இருந்தது. பல வெளிநாடுகளின் பல்தேசிய நிறுவனங்கள் ஆரம்பத்தில் இலவசமாகப் பால்மாவை வழங்கின. குறிப்பாக குழந்தைப் பால்மா. இதற்காகக் கடுமையான பணச் செலவுடன் விளம்பரங்கள் போட்டு மக்களிடம் பால்மா உற்பத்திகளைக் கொண்டு சேர்த்தனர். இதன் காரணமாக மக்கள் திரவப் பால் நுகர்வைக் கைவிட்டு பால்மா நுகர்வுக்கு அடிமையாகினர்.”**

# சோயாப் பயிர்ச்செய்கையில் இலாபம் பெறுவது எவ்வாறு?



ஆனந்தன் பிரேம்நாந் லக்சி பண்ணை



எமது விவசாயிகள் வெவ்வேறு வகையான பயிர்ச் செய்கையில் ஈடுபடும்போதும் சோயா பயிரிடுவது மிகக் குறைவாகவே உள்ளது.

இதற்கு எமது நாட்டின் விவசாயம் சார்ந்த கொள்கையும் மாவட்ட விவசாயத் திணைக்களமும் தான் முதல் காரணமாக இருக்கின்றது. பயறுவகைகளை பயிரிடுவதில் ஆர்வமுள்ள விவசாயிகள் 90 நாளில் பலன் தரக்கூடிய சோயா பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதன் மூலம் கூடுதல் விளைச்சல் பெறலாம். அதிக இலாபமும் பெறலாம் என்பதனை விவசாய திணைக்களங்கள் எமது விவசாயிகளுக்கு ஊக்குவிப்பதில்லை.

சோயா பயிர் ஆனது பயறு, உளுந்து, கௌபி போன்று சிறிய பயிராக இருக்காது குறைந்தது 3, 4 அடி வரை வளரக்கூடியது.

இது ஜூன்-ஜூலை, செப்டம்பர்-அக்டோபர், பிப்ரவரி-மார்ச் ஆகிய மாதங்களில் நடுகை செய்யலாம். களிமண், மணல் மண், கற்கள் நிறைந்த மண் தவிருந்த ஏனைய அனைத்து மண்ணிலும் நன்றாக வளரக்கூடியது.

சோயாவினை பொறுத்தவரை கோ1, கோ 2, ஏ டி டி 1 போன்ற 3,4 இரகங்கள் உள்ளன. அதில் அதிக விளைச்சலை தரக் கூடிய இரகத்தினை தேர்வு செய்து நட வேண்டும்.

சோயா மொச்சையானது 90ஆவது நாளில் வளர்ந்து பயனளிக்கக் கூடியது. 40ஆவது நாளில். 50 % பூக்கும் திறன் கொண்டது.

தரிசு (மானாவரி) நிலங்களில் நெல் பயிரிடுவதற்கு முன்பு சோயாவை பயிரிட்டால் எதிர்காலத்தில் நெல்லின் விளைச்சல் அதிகமாக இருக்கும்.

என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. காரணம் ஏனைய தானியங்கள் போன்றோ சோயாவும். மண்ணுக்கு அதிகளவான நைட்ரஜனை கொடுக்கக்கூடிய பயிராகும்.

அதனால்தான் சோயா பயிரிட்ட நிலத்தில் வேறு எந்த பயிரை நட்டாலும். அப்பயிர் அதிக விளைச்சலை கொடுக்கும். சோயா நடும் பொழுது வாய்க்கால் முறையில் பாத்தி எடுத்து நடவேண்டும். ஏக்கருக்கு 30 கிலோ விதை போதுமானது.

வேறு நீண்டகால பயிர்களுக்கு மத்தியில் ஊடுபயிராக பயிரிட நினைத்தால் 10 கிலோ விதை போதுமானது.

விதை நேர்த்தி செய்யும் போது ஜீவாமிர்தம் கலந்து பின்பு 15 நிமிடம் காய வைத்து பின்பு நடுகை செய்தால் முளைத்திறன் 98 வீதம் இருக்கும்.

நடும் பொழுது 3 சென்டிமீட்டர் ஆழத்தில் 30×30 சென்டி மீட்டர் இடைவெளியில் நட வேண்டும்.

பயிர் நட்டு 20 - 30ஆவது நாளில் பயிர் வளர்ச்சி ஊக்கியாக ஜீவாமிர்தமும் பயன்படுத்தவேண்டும்.

பயிர் நாட்டிய 30 வது நாளில் கட்டாயம் களை எடுக்க வேண்டும். சோயாவினை நோய்கள் தாக்குவதும் குறைவு.

இருப்பினும் குறுத்தி இலைகள், பூக்களை பீடைகள் தாக்குவதும் உண்டு.

இதனை இயற்கை கிருமி நாசினிகளான அக்கினி அஸ்திரா, மூலிகை கரைசல், கற்பூர கரைசல் போன்றவற்றை மாறி. மாறி பயன்படுத்தலாம்.

**குறிப்பு**

பூக்கும் சந்தர்ப்பங்களில் கிருமி நாசினிகளைப் பயன்படுத்துவதை முடிந்தவரை குறைக்க வேண்டும். மாறாக பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படும் பட்சத்தில் மாலை வேளையில் பயன்படுத்த வேண்டும்.

40ஆவது நாளில் தேமோர் கரைசலையும் பயன்படுத்தினால் பூ உதர்வது கட்டுப்படுத்தப்பட்டு. திரட்சியாகக் காய்த்து அதிக விளைச்சல் பெறலாம்.

வாரத்திற்கு ஒரு தடவை ஜீவாமிர்தம் அல்லது பஞ்சகாவியா அல்லது தேமோர் கரைசலை மாறி மாறி பயன்படுத்தலாம்.

நாட்டிய அன்று நீர் பாய்ச்ச வேண்டும்

3ஆம் நாள் உயிர் நீர் பாய்ச்ச வேண்டும்

பின்பு தேவைக்கு ஏற்றாற்போல் நீர் பாய்ச்ச வேண்டும்.

சோயா வெப்பத்தை தாங்கி வளரக்கூடிய பயிர் ஆகும்

3 அல்லது 4 நாட்களுக்கு ஒரு தடவை நீர் பாய்ச்சினால் போதுமானது.

ஈரப்பதன் அதிகமாக இருந்தால் வேர் அழுகல் போன்ற நோய்கள் ஏற்பட்டு நிச்சயம் பயிர் பாதிக்கப்படும்.

பூக்கும் பருவத்திலிருந்து முதிர்ச்சிப் பருவம் வரை நீர் பற்றாக்குறையாக இருக்கும் பட்சத்தில் பயிரை பெரிய அளவில் பாதிக்காது பாதிப்பதிக்காது.

மேலும் இப்பயிரை வாழை, மரவள்ளி, பருத்தி, தென்னை, முருங்கை, மா, தோடை, கறிவேப்பிலை, பலா, கொய்யா, மாதுளை போன்ற நீண்டகாலப் பயிர்களுக்கிடையில் ஊடுபயிராகப் பயிரிடலாம்.

இலைகள் பழுக்க ஆரம்பித்தாலே அறுவடைக்கு தயாராகி விட்டது என்று அர்த்தம்.

இலைகள் நன்கு பழுத்து உதிர்ந்தவுடன் நிலமட்டத்தில் செடியை அறுத்து காயவைத்து பின் மணிகளைப் பிரித்துத் தூற்றிச் சுத்தம் செய்ய வேண்டும்.

ஏக்கருக்கு 6000 - 7000 கிலோ விளைச்சல் கிடைக்கும்.

சோயாவைப் பயிரிட நினைக்கும் விவசாயிகள் சற்று கவனமாகவும் நிதானமாகவும் சிந்தித்து நடுகை செய்ய வேண்டும்.

காரணம் எமது நாட்டில் சோயாவானது அதிக அளவில் நடுகை செய்யப்படாததால் சந்தை வாய்ப்பு சற்று குறைவாக இருக்க வாய்ப்புள்ளது.

மேலதிக ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக என்னைத் தொடர்பு கொள்ளவும்.

Ph: 0770239784






(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருப்பதை தாங்கள் புரிந்துகொண்டுள்ளதாகவும், வலுவான முறையில் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுக்க வேண்டியதன் அவசியத்தை இந்தகுழு மேலும் வலியுறுத்துகிறது. ஏதாவது தாமதங்கள் ஏற்படுமானால் அதனால் இலங்கைக்கான பொருளாதாரக் கண்ணோட்டத்தை மோசமாக்குவதோடு நாட்டின் நிதி இடைவெளிகளை விரிவுபடுத்தும், நிலையான வளர்ச்சிக்கு திரும்புவதைத் தடுக்கும் மற்றும் அதன் மூலம் திருப்பிச் செலுத்தும் திறனைக் குறைக்கும் என்று அழுத்தமாக சொல்லப்பட்டுள்ளது.

"சமீபத்தில் வெளியிடப்பட்ட IMFஇன் ஆளுகையைக் கண்டறியும் அறிக்கையின் முக்கிய பரிந்துரைகளை செயற்படுத்த அதிகாரிகளின் உறுதிப்பாடு வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும் என கூறபட்டுள்ளது. பொருளாதார நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கும், வளர்ச்சியை மேலும் வலுவாகவும் உள்ளடக்கியதாகவும் மாற்றுவதற்கு ஊழல் அபாயங்களை நிவர்த்தி செய்வதற்கும் பொறுப்புக்கூறலை வலுப்படுத்துவதற்கும் உறுதியான நடவடிக்கைகள் அவசியம் என்று சொல்லப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் நிதியமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி பி. நந்தலால் வீரசிங்க, இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, திறைசேரியின் செயலாளர் கே.எம். மஹிந்த சிறிவர்தன மற்றும் ஏனைய சிரேஷ்ட அரசாங்க மற்றும் சி.பி.எஸ்.எல் அதிகாரிகளுடன் IMF குழு சந்திப்புகளை நடத்தியது. IMF குழு பாராளுமன்ற உறுப்பினர்கள், தனியார் துறை பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் மேம்பாட்டு பங்காளிகளையும் சந்தித்தது. சிறப்பான ஒத்துழைப்பு மற்றும் ஆக்கப்பூர்வமான விவாதங்களுக்கு குழு அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்தது."

எனவே, இலங்கைப் பொருளாதாரம் ஸ்திரத்தன்மைக்கான ஆரம்ப அறிகுறிகளைக் காட்டியுள்ள நிலையில், மேக்ரோ பொருளாதாரக் கொள்கை சீர்திருத்தங்கள் பலன்களைத் தரத் தொடங்கியுள்ளன என்பது ஊக்கமளிக்கின்றது. எவ்வாறாயினும், நீடித்த மீட்சி மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதிப்படுத்த இன்னும் தொடர்ச்சியாக பல செயற்றிட்டங்களினை செய்ய வேண்டியுள்ளது என்பதை அங்கீகரிப்பது அவசியம். நிர்வாகத்தின் பலவீனங்கள் மற்றும் ஊழல் பாதிப்புகளை நிவர்த்தி செய்வதுடன், சீர்திருத்தத்தின் வேகத்தைத் தொடர்வதும் இதில் அடங்கும். மறுஆய்வு செயன்முறையின் நிறைவு, முந்தைய செயல்களைச் செயற்படுத்துதல் மற்றும் நிதியளிப்பு உத்தரவாத மதிப்பாய்வுகளை வெற்றிகரமாக முடிப்பதைப் பொறுத்துள்ளது. குறிப்பாக கடன் மறுசீரமைப்பு தொடர்பானது. பொருளாதார நம்பிக்கையை மீட்டெடுக்கவும், நாட்டின் வளர்ச்சியை ஆதரிக்கவும் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பது இன்றியமையாததாக இருக்கும்.

பணவீக்கக் குறைப்பு மற்றும் நிதிச் சீர்திருத்தங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் குறிப்பிடத்தக்க சாதனைகள் இருந்தபோதிலும், முழுமையான பொருளாதார மீட்சிக்கான பாதை நிச்சயமற்றதாகவே உள்ளது. மிகவும் நிலையான மற்றும் திடமான பொருளாதார சூழலை உருவாக்க, வெளிப்புற அழுத்தங்கள் மற்றும் கடனாளர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் போன்ற சவால்கள் தீர்க்கப்பட வேண்டும். ஆளுகையைக்கண்டறியும் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அதிகாரிகளின் அர்ப்பணிப்பு வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்கான ஒரு பாராட்டத்தக்க படியாகும். இது பொருளாதார நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு பங்களிக்கும்.

ஆகவே, சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கை அதிகாரிகளுக்கும் இடையிலான பணியாளர்மட்ட உடன்படிக்கை ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும். இது நாட்டைப் பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சியை நோக்கி முன்னோக்கி செல்லும் பாதையை வழங்குகின்றது. இரு தரப்பினரின் கூட்டு முயற்சிகள், தேவையான சீர்திருத்தங்களுக்கான அர்ப்பணிப்புடன் இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார சவால்களை எதிர்கொள்வதில் முக்கிய பங்கு வகிக்கும். இலங்கையின் நிலையான, உள்ளடக்கிய மற்றும் செழிப்பான எதிர்காலத்தை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து பங்குதாரர்களுக்கும் இடையில் விழிப்புணர்ச்சி, உறுதிப்பாடு மற்றும் தொடர்ச்சியான ஒத்துழைப்புத் தேவை.





# எங்கட ஆச்சி



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

ஒரு நாள் எங்கட பக்கத்து வீடு ஒண்டில கலியாண வீடு. அதுதான் பொம்பிளை வீடு எண்ட படியால மாப்பிளை தாலி கட்டி முடிஞ்சதும் வழக்கம்போல பலகாரம் குடுத்தவை.

நாங்கள் கொஞ்ச விடலைப் பெடியள் ஒண்டா இருந்தனாங்கள். பலகாரத்தட்டம் எங்கட பக்கம் வந்ததும் பாஞ்ச பாச்ச லிலை தட்டம் தட்டுப்பட்டு பலகாரம் முழுக்க விரிச்சிருந்த களப்பாயில விழுந்து போட்டுது.

உதைப்பாத்துக் கொண்டிருந்த ஆக்கள் பழக்கவழக்கம் தெரியாத பரதேசியள் உவட்டையள் என்னத்துக்கு சபை சந்தியளுக்கு வாறதுகள் எண்டு பேசவும் அதைக்கேட்ட ஆச்சிக்கு கடும் கோபம் வந்திட்டுது.

எண்டாலும் பேசாம இருந்தவ வீட்டை போனதும் முத்தத்தில கிடந்த விளக்கு மாத்தால சாத்து சாத்தெண்டு சாத்திப் போட்டு சபைப்பழக்கம் தெரியாதனி என்னத்துக்கு சபைக்கு வந்து பல நாள் தின்னாமக்குடியாமை கிடந்தவன் மாதிரி ஆக்களின்ரை மானத்தை வாங்கிறாய் .

உனக்கு என்ன தின்னக் குடிக்க வழி இல்லையே. உனக்கு இஞ்சை வீட்டில அவிச்சுக் கொட்டேல்லையே . இனிமேல் எங்கையும் சபை சந்திக்கு வெளிக்கிடுவியே.சாய்க் ... உன்னால ஆக்களுக்கை என்ரை சீலை உரிஞ்சு விழுந்து போச்சு எண்டு பேசினா.

ஆச்சியின்ரை அடியை விடப் பேச்சுத் தான் எனக்கு உறைச்சது கூட. அண்டையில இருந்து நான் சபைசந்திகளுக்குப் போனால் சாப்பாட்டு விசயத்தில கடும் கவனம். ஆச்சி சொன்ன விசயத்தைத்தான் வெள்ளைக்காரன் டேபிள் மனர்ஸ் எண்டு சொல்லுறவன்.ஆனால் உந்தப்பண்பாடு கன ஆக்களிட்டை இல்லாதது கண்கூடு. எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் சோறு கறி எல்லாத்தையும் நிறையத் தட்டில போட்டு ஒண்டா உள்ளங்கை படக்குழைச்சு உருண்டையாக்கி வாய்க்குள்ள பாஸ்கற் போலை கூடையுக்கை எரியிரமாதிரி எறிவார். அதோட தின்னேக்கை சளக்..பளக்.. எண்டு ஒருவிதமான சத்தம் வரும். திண்டு கொண்டே முன்னால இருக்கிறவரைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் அவரில எச்சில் பட்டுத்தெறிக்கிற மாதிரி கதைப்பார்.

இன்னுமொருத்தர் இருக்கிறார் சாப்பாட்டுக்காக வரிசையில் நிற்பவரைப்பற்றிக் கவலைப்படாமல் விழுந்தடிச்சுக்கொண்டு குறுக்கால ஓடிப்போய் சாப்பாடு எடுப்பார். அவரில இன்னொரு பழக்கம் இருக்குது திண்ட கையாலையே கறண்டியைப் பிடிச்சுக் கறி எடுப்பார்.

அதை மாதிரி ஒரு கறண்டியாலேயே பக்கம் பக்கமா இருக்கிற ரெண்டு மூண்டு கறியளை எடுப்பார் .

இன்னொருத்தர் இருந்தவர் வெள்ளையும் சொள்ளையுமா வெளிக்கிட்டுப்போய் சொல்லாத சபை எல்லாம் முன்னாலபோய் இருந்து திண்டுபோடுவார். அவரில இன்னுமொரு பழக்கம் இருந்தது எங்கேனும் மண்டபங்களில் நடக்கிற வைபவங்களுக்குப் போய் இடைவேளை நேரம் பலகாரங்கள் குடுக்கேக்கை கை நிறைய அள்ளி தோளில இருக்கிற பையில போடுவார். இதால மண்டபத்தில பின்னால இருக்கிற சிலருக்கு ஒண்டுமே கிடைக்காது. பலகாரம் குடுத்து முடிஞ்சதும் விழா முடிஞ்சுதோ இல்லையோ வெளிக்கிட்டுப் போய் விடுவார்.

இன்னொருத்தர் இருக்கிறார் ஏதும் வைபவங்களுக்குப் போனால் அங்க என்ன நடக்குது கொள்ளுது எண்டு பாக்க மாட்டார் நேர சாப்பாட்டறைக்குப் போடுவார். அத மாதிரி கோயிலுக்குப் போனார் எண்டால் சாமி தூக்கேக்கையே அன்னதான மண்டப வாசலில நிப்பார். இன்னொருத்தர் இருக்கிறார் நல்லா வயிறு முட்டத் திண்டு ஏவறை விட்டுக்கொண்டே சாப்பாடு அவ்வளவு விசேசமில்லை எண்டு வைபவம் செய்தவைக்கு முகத்துக்கு நேரே சொல்லிப்போட்டுப் போவார். அப்பிடி போகேக்கை வெளியில மேசையில இருக்கிற பீடா , கேசரி, வாழைப்பழத்தில மறக்காம அஞ்சாறு எடுத்துக் கொள்ளுவார்.

சிலர் இருக்கினம் ஆவேசம் பிடிச்சவை மாதிரி எல்லாத்தையும் அள்ளிக்கோப்பையில போட்டுக்கொண்டு வந்து மூக்கு ஒழுக ஒழுகத் திண்டு போட்டு நிறைய மிச்சம் விடுவினம். அவை திண்ட இடத்தைப் பாத்தா ஏதோ சண்டை நடந்த இடம் மாதிரி இருக்கும். போற போக்கில அப்பிடியே மேசை விரிப்பில கையைத் துடைச்சுப் போட்டுப் போவினம்.எங்கட ஆச்சி நெடுகச் சொல்லுவா சாப்பாட்டுக்கு ஒவ்வொருத்தரும் எவ்வளவோ கஷ்ரப்படுகினம். உங்க எத்தினையோ வீடுகளில சாப்பாடு இல்லாம பட்டினி கிடக்கினம். சாப்பாட்டை ஒருநாளும் வீணாக்க கூடாது கொட்டக் கூடாது. அளவோட போட்டுச்சாப்பிட வேணும்.

அத மாதிரி சாப்பாட்டை நாங்கள் மதிக்க வேணும். சாப்பிடேக்கை ஒருநாளும் வீண் கதையள் கதைக்க கூடாது. சாப்பிட முந்தி உந்தச் சாப்பாட்டை தந்ததுக்கு அப்பனே பிள்ளையாரப்பா எண்டு கும்பிட்டு நன்றி சொல்ல வேணும். சாப்பிட்ட இடத்தைச் சாப்பிட்டு முடிஞ்சதும் துப்பரவாக்க வேணும். இல்லாதவன் செல்லாதவனுக்கு குடுத்து வாங்கிச் சாப்பிட வேணும். எவன் ஒருத்தன் அன்னலட்சுமியை அதுதான் சாப்பாட்டை மதிக்கிறானோ அவனுக்குத்தான் சாகும் வரைக்கும் சாப்பாட்டுக்கு பஞ்சம் வராது எண்டுவா. நாங்கள் எல்லாரும் சாகும்வரை ஆச்சி சொன்னமாதிரி சாப்பாட்டுக்குப் பஞ்சம் இல்லாமல் இருக்க வேணும் எண்டது தான் என்ரை ஆசை.

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.11.2023இல் வெளியிடப்பெற்றது.

# வேலை வாய்ப்பு
## வரி விளம்பரங்கள்

JOB VACANCY

### பணியாளர்கள்

**வேலைகள்:** முகாமையாளர்
விற்பனைப் பிரதிநிதிகள்
சிற்றூழியர்கள்
**தொடர்புகளுக்கு:** 076 315 6470

### ஆசிரியர்

**நிறுவனம்:** தனியார் கல்வி நிலையம்
**பணியிடம்:** வடமராட்சி
**தகைமை :** கணிதம், தமிழ்,ஆங்கிலம், வரலாறு(6-11) கற்பிக்கக் கூடிய ஆசிரியர்
**தொடர்புகளுக்கு:** 021 791 7791, 077 087 2903

### உணவக வேலைவாய்ப்பு

**நிறுவனம்:** தாஜ்மஹால் ஹோட்டல்
**பணியிடம்:** குருநாகல் ரோடு, ஹெட்டிப்பொல
**வேலை:** ரொட்டி தயாரிப்பாளர், சிற்றூழியர்
**தொடர்புகளுக்கு:** 0740450140, 0706322630

### பணிப்பெண்

**பணியிடம்:** மாலுசந்தி பத்தானை (வயோதிப மாதுவைத் தங்கி இருந்து பராமரிக்க பெண் பணியாளர்)
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கலாம்.
**தொடர்புகளுக்கு:** 077 062 4860

### முகாமையாளர்

**நிறுவனம்:** கல்யாணமாலை (இலவச திருமண சேவை)
**பணியிடம்:** யாழ். நகர்
**பால்:** இருபாலாரும்
**வயதெல்லை:** 40 இற்கு மேல். அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
**தொடர்புகளுக்கு:** 076 097 3121

## பல்கலைக்கழக வேலைவாய்ப்பு

### கொழும்புப் பல்கலைக்கழகம்

**பதவிகள்:**
1.கலைப் பீடம்
சர்வதேச உறவுகள் துறை
விரிவுரையாளர் (தகுதிகாண்) / விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதது)/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/I
**இணையத்தளம்:** https://forms.gle/82e6d7jEmHZjCcno9
2.கல்வித்துறை
சமூக அறிவியல் கல்வித் துறை
விரிவுரையாளர் (தகுதிகாண்) / விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதது)/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/I
**இணையத்தளம்:** https://forms.gle/5xMqmuQR3bXTrye9A
**ஒப்பந்தப் பதவிகளில்:**
1.தேர்வுகள் கிளை
சிஸ்டம்ஸ் டெவலப்பர் - ஒப்பந்தத்தில்
**இணையத்தளம் :** https://forms.gle/apcmAg2XWS6YwHC39
**விண்ணப்ப செயல்முறைக்கான பல்கலைக் கழக இணையத் தளம்:** https://emb.ac.lk/vacancies
**விண்ணப்பிக்க வேண்டிய மின்னஞ்சல்:** recruit@ ace.cmb.ac.லக்
**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:** துணைப் பதிவாளர்/ கல்வி நிறுவனாங்கள், கொழும்பு பல்கலைக்கழகம், 94, குமாரதுங்க முனிதாச மாவத்தை, கொழும்பு 03.
**விண்ணப்ப முடிவுத் திகதி :** 13.11. 2023

## வங்கி வேலைவாய்ப்பு

**நிறுவனம்:** வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி NCDB
**பணியிடம்:** கைதடி
**பதவிகள்:**
1. நிதி உத்தியோகத்தர் (Finance Officer)
**தகைமை:**
* பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு இணையான தகைமை. கணக்கியல்/ முகாமைத்துவத் துறை.
* குறைந்த பட்சம் 3 வருடம் நிதி / கணக்கியல் பிரிவில் வேலை செய்த அனுபவம்.
* தொழில்சார் தகைமை (CA/CMA/CIMA/CPA) மேலதிக தகைமையாக கொள்ளப்படும்
* கணக்காய்வு அறிக்கைகளை பகுப்பாய்வு செய்யக்கூடிய ஆற்றல்

2. ஆய்வு உத்தியோகத்தர் ( Research Officer)
**தகைமை :**
* துறை சார்ந்த பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு இணையான தகைமை.
*ஆய்வுத்துறையில் குறைந்தது 3 வருட அனுபவம் கொண்டிருத்தல்
*தேவையேற்படின் எந்த இடத்திற்கும் களப்பயணம் செய்யும் ஆற்றல் கொண்டிருத்தல்
*ஆய்வு மற்றும் பகுப்பாய்வுத் திறன் கொண்டிருத்தல்
*குழுவாக இணைந்து வேலை செய்யும் திறன் (Team Work Skills)

பொதுவான தகைமைகள்:
* Ms Office மென்பொருளை கையாளும் திறன்
* கூட்டுறவுத்துறை தொடர்பான அனுபவத்திற்கு முன்னுரிமை
* தகவல் தொடர்பாடல் திறன் கொண்டிருத்தல்

**விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள:** lk.ncdb@gmail.com
**விண்ணப்ப முடிவுத் திகதி :** 15.11.2023
**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:** தலைவர், வடக்குக் கூட்டுறவு அபிவிருத்தி வங்கி, முதியோர் இல்ல வளாகம், கைதடி.
**சம்பளம் :** நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
**நியமனம் :** ஒப்பந்த அடிப்படை

### பணியாளர்கள்

**நிறுவனம்:** Air and Sea Logistics (Pvt)
**பணியிடம்:** கொழும்பு 03
**பதவிகள்:**
கணக்காளர்
உதவிக் கணக்காளர்
செயலாளர்கள்
Wharf எழுதுனர்
Customs entry framing clerk
விற்பனை நிர்வாகி
போக்குவரத்து நிர்வாகி
Warehouse செயற்பாட்டு பயிற்சியாளர்கள்
மேலாண்மைப் பயிற்சியாளர்
விவசாய உதவியாளர்
Riders
கனரக வாகன ஓட்டுநர்கள்
பொறிமுறையாளர்
**மின்னஞ்சல்:** afa.wexp@yahoo.com
**விண்ணப்பிக்கும் முகவரி:** Air and Sealogistics(pvt)Ltd, இல- 14, ஸ்ரீ தர்மகீர்த்தியராம வீதி, கொழும்பு 3.
**தொடர்புகளுக்கு:** 0112342807

### செயலாளர்

**நிறுவனம்:** The Colombo Archdiocesan Central Archives
**பணியிடம்:** கொழும்பு
**பால்:** ஆண் அல்லது பெண்
**வேலை நேரம்:** முழுநேர ஊழியர்
**தகைமை:**
ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் படித்தல், புரிந்து கொள்ளுதல்,பேசுதல் மற்றும் எழுதுதல்.
MS Office தொகுப்பில் கணினி கல்வியறிவு
ஆவணப்படுத்தல் - அட்டவணைப்படுத்துதல், வகைப்படுத்துதல், தாக்கல் செய்

# வேலை வாய்ப்பு
## வரி விளம்பரங்கள்




தல், பதிவுகளை வைத்திருத்தல்
உரோமன் கத்தோலிக்க மதம் மற்றும் இலங்கையின் திருச்சபை வரலாறு பற்றிய போதுமான அறிவு ஆகியவற்றைக் கொண்டவர்
**விண்ணப்பிக்கும் முறை**: அடையாள அட்டையின் புகைப்பட நகல் மற்றும் கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் பணிபுரியும் கத்தோலிக்கப் பாதிரியார் அல்லது கன்னியாஸ்திரியின் பரிந்துரை கடிதத்துடன் உங்கள் விரிவான சுயவிபரக் கோவையை அனுப்பவும்.
**மின்னஞ்சல் முகவரி**: archdiocesancentr - alarchives@gmail.com
**அஞ்சல் முகவரி**: Archivist-Archdiocesan Central Archives, Archbishop's House, P.O. பெட்டி 20, ஞானார்த்த பிரதீபாய மாவத்தை, கொழும்பு 08.

**வரவேற்பாளர் - புதிய பூக்கடை திறப்பு!**
**பணியிடம்** : கொழும்பு
**தகைமைகள்**:
∗ நல்ல தொடர்பு மற்றும் விளக்கக்காட்சி திறன்
∗ ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் சரளமாக பேசக்கூடியவர்
∗ இனிமையான மற்றும் மகிழ்ச்சியான ஆளுமை
**வயது** : 30 வயதுக்கு குறைவு
**வேலை நேரம்** : காலை 8 மணி - மாலை 7 மணி (திங்கள் - சனி)
**சம்பளம்** : பேசித்தீர்மானிக்கலாம்.
**தொடர்புகளுக்கு** : 0772 303 556

**சந்தைப்படுத்தல் மேலாளர் - புதிய பூக்கடைத் திறப்பு**
**நிறுவனம்**: பூக்கடை
**பணியிடம்**: கொழும்பு
**தகைமைகள்**:
நல்ல தொடர்பு மற்றும் ஆளுமை
ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் சரளமாக பேசக்கூடியவர்
இனிமையான மற்றும் மகிழ்ச்சியான ஆளுமை
**வயது**: 45 வயதுக்கு குறைவு
**வேலை நேரம்**: காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை (திங்கள் - சனி)
**சம்பளம்**: பேசித்தீர்மானிக்கலாம்.
**தொடர்புகளுக்கு**: 0772 303 556

**சந்தைப்படுத்தல் மேலாளர் - புதிய பூக்கடைத் திறப்பு**
**நிறுவனம்**: பூக்கடை
**பணியிடம்**: கொழும்பு
**தகைமைகள்**: நல்ல தொடர்பு மற்றும்

ஆளுமை
ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் சரளமாக பேசக்கூடியவர்
இனிமையான மற்றும் மகிழ்ச்சியான ஆளுமை
**வயது**: 45 வயதுக்கு குறைவு
**வேலை நேரம்**: காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை (திங்கள் - சனி)
**சம்பளம்**: பேசித்தீர்மானிக்கலாம்.
**தொடர்புகளுக்கு**: 0772 303 556

ஆளுமை
ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் சரளமாக பேசக்கூடியவர்
இனிமையான மற்றும் மகிழ்ச்சியான ஆளுமை
**வயது**: 45 வயதுக்கு குறைவு
**வேலை நேரம்**: காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை (திங்கள் - சனி)
**சம்பளம்**: பேசித்தீர்மானிக்கலாம்.
**தொடர்புகளுக்கு**: 0772 303 556

### தனியார் வேலைவாய்ப்பு

**நிறுவனம்**: WEC epWtd Showroom
**பால்**: இருபாலாரும்
**பதவி**:
கணக்காளர்
நிர்வாக உத்தியோகத்தர்
காசாளர்
விநியோகஸ்தர்
காட்சியறை உதவியாளர்
காட்சியறை முகாமையாளர்
**முடிவுத்திகதி**: 12.11.2023
**வயது** : 40 வயதிற்குட்பட்டவர்
**தொடர்புகளுக்கு** : 077 0287429, 021 722 3317

### உணவக வேலைவாய்ப்பு

**பதவி**: முகாமையாளர்
**நிறுவனம்**: சைவ உணவகம்
**பணியிடம்**: யாழ்ப்பாணம்
**தகைமை**: அனுபவம், மொழியாற்றலுடன் கூடிய முகாமையாளர்.
அர்ப்பணிப்புடன் பணியாற்றக் கூடியவர்
**சம்பளம்**: நல்ல சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு** : 077 3611 301, 0777 112 269

### அலுவலக வேலைவாய்ப்பு

**நிறுவனம்**: தனியார் நிறுவனம்
**பணியிடம்**: வெள்ளவத்தை
**பதவிகள்**:
கணினி வடிவமைப்பாளர்
தமிழ் தட்டெழுத்தாளர்
காசாளர்
அலுவலக உதவியாளர்
**பால்**: இருபாலாரும்
**தொடர்புகளுக்கு**: 075 0252141

**பணிப்பெண்**
**பணியிடம்**: நல்லூர்
**தொடர்புகளுக்கு**: 0770726661, 0706726661

**பணிப்பெண்**
தங்கிநின்று வேலை செய்யக்கூடியவர் விரும்பத்தக்கது
தொடர்புகளுக்கு: 0770492210, 0773696714

**நிறுவனம்**: RG Brothers (Pvt)Ltd
**பணியிடம்**: எலகந்தை
பதவி: பணியாளர்
பொறி இயக்குநர்
**அனுகூலம்**: தங்குமிட வசதி
**முகவரி**: RG Brothers
இல - 228, கனல் வீதி,
எலகந்தை, வத்தளை.
**தொடர்புகளுக்கு**: 074 0910643, 0774482323

**பணியாளர்கள்**
மேசன்
பொட்டி பெயின்ட்
மோல்டிங்,டைல், டைட்டேனியம்
பாஸ்மார்
உதவியாட்கள்
**தொடர்புகளுக்கு**: 071 4017792

**சிகையலங்கார நிலைய வேலைவாய்ப்பு**
**நிறுவனம்**: சிகையலங்கரிப்பு நிலையம்
**வேலை**: சிகையலங்கார நிபுணர்
**பால்**: பெண்கள்
கவர்ச்சிகரமான உயர் சம்பளம், போனஸ்
**Whatsapp**: +6598336626
**மின்னஞ்சல்**: salonlankadeepa@gmail.com

**கணினித் தட்டெழுத்தாளர்**
பணியிடம்: சாவகச்சேரி நகர்
சம்பளம்: கவர்ச்சிகரமான சம்பளம்
தொடர்புகளுக்கு: 076 573 4507

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY
புதன்கிழமை
01.11.2023

# வேலை வாய்ப்பு
## வரி விளம்பரங்கள்




**காவலாளர்**
**நிறுவனம்:** SECURE SECURITY & INVESTIGATIONS (PVT) LTD
**பதவி:** தலைமைப் பாதுகாப்பு அதிகாரி
**வயது:** 35-55
**அனுபவம்:** குறைந்தபட்சம் 03 வருட அனுபவம்.
**தகைமை:**
கணினி கல்வி
சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் சிறந்த தொடர்பாடல் திறன்
சிறந்த தலைமைத்துவம், குழுப்பணி மற்றும் பணியாளர்களுக்கிடையே யான திறன்கள். திவுலபிட்டிய, நீர் கொழும்பு, தங்கொடுவ,பன்னல,கிரியுல்ல பிரதேசங்கள் ஆகிய இடங்களில் நிரந்தரக் குடியிருப்பு.
**சம்பளம்:** 1700.00 - 12 மணித்தியாலங்களுக்கு
**முகவரி:** SECURE SECURITY & INVESTIGATIONS (PVT) LTD No.92, KANDAWATTA ROAD, NUGEGODA.
**தொடர்புகளுக்கு:** 0773829853, 0112821996
**மின்னஞ்சல்:** jobops78@gmail.com

**சிரேஷ்ட கணக்காளர்**
**தகைமை:**
எந்தவொரு அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் அமைப்பிலும் (AAT/CA/ACCA/CIMA) கணக்கியலில் BSc பட்டம் அல்லது பகுதி தகுதி.
குறைந்தபட்சம் 05 வருட அனுபவம்.
SAGE இல் கணக்கியல் அமைப்பு, தணிக்கை மற்றும் பகுப்பாய்வு மற்றும் சிறந்த அறிவு பற்றிய அறிவு
சுறுசுறுப்பான ஆளுமையுடன் ஒரு நல்ல தொடர்புத்திறன்
அழுத்தத்தின் கீழ் வேலை செய்யும் திறன்.
நில அளவையாளர் - MEP/கட்டிட சேவைகள்
**தகைமை:** விஞ்ஞானமானி நில அளவையில் பட்டம் 2 வருட அனுபவத்துடன், HNDE இல் 05 வருட அனுபவத்துடன்.
ஆட்டோ CAD & தற்போதைய சந்தை விலைகள்,ஒப்பந்த செயல்முறை பற்றிய அறிவு.
அளவீடு செய்தல், தொழில்நுட்ப வேலைகளை மேற்கொள்வது
சுறுசுறுப்பான ஆளுமையுடன் நல்ல தொடர்பு திறன், அழுத்தத்தின் கீழ் வேலை செய்யும் திறன்.
**படவரைஞர் (MEP கட்டுமானம்)**
**தகைமை:** NCED/NCD அல்லது அதற்கு இணையான 5 வருட அனுபவத்துடன்

தொடர்புடைய துறையில்
கணினி கல்வியறிவு மற்றும் AutoCAD & MS Office/ Excel இல் தேர்ச்சி
சுறுசுறுப்பான ஆளுமையுடன் நல்ல தொடர்பு திறன். அழுத்தத்தின் கீழ் வேலை செய்யும் திறன்.
நேர்மறையான அணுகுமுறை
**சுயவிபரக்கோவையை அனுப்பவேண்டிய மின்னஞ்சல்:** prasannah@asdaengineering.lk/acasdaeng@gmail.com.
**தொடர்புகளுக்கு:** 011-2871891

**நிறுவனம்:** இளைஞர்கள் கிறிஸ்தவ சங்கம்- யாழ்
**பதவி:** தொடர்பு அலுவலர் (திட்ட ஒருங்கிணைப்பாளர்)
**பணியிடம்:** யாழ்ப்பாணம்
**தகைமைகள்:**
தொண்டு அல்லது அரசு சாரா நிறுவனங்களில் குறைந்தபட்சம் இரண்டு வருட அனுபவத்துடன் தொடர்புடைய துறையில் டிப்ளமோ விரும்பத்தக்கது.
மாற்றாக, க. பொ. த உயர் தரத்துடன் இதே போன்ற நிறுவனங்களில் நான்கு வருட அனுபவம்.
தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வலுவான தகவல் தொடர்பு திறன், MS office இல் தேர்ச்சி.
பல்வேறு குழுக்கள் மற்றும் அடிமட்ட அளவிலான சமூகங்களுடன் பணிபுரியும் திறன்.
**சம்பளம்:** ரூ.25,150.00
**வாழ்க்கைச் செலவுச் கொடுப்பனவு:** ரூ.7,800.00
**அனுகூலங்கள்:** மருத்துவத் திருப்பிச் செலுத்துதல் மற்றும் பணியாளர் கடன் (பொருந்தக்கூடிய நிபந்தனைகள்)
**விருப்ப வயது:** 22-40
**விண்ணப்பங்களை** (CV) **அனுப்ப வேண்டிய முகவரி:** பொதுச் செயலாளர், 109, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
**விண்ணப்ப முடிவுத் திகதி:** 15.11.2023
**தொடர்புகளுக்கு:** 021 222 2499

**முகாமையாளர்**
**நிறுவனம்:** எரிபொருள் நிரப்பு நிலையம்
**பதவி :** முகாமையாளர் (Manager)
**தொடர்புகளுக்கு :** 077 0669467

**காவலாளர்**
**பணியிடம் :** தெகிவளை, ஆமர் வீதி, சியம்பலாபே
**தொடர்புகளுக்கு:** 0768179520, 0714285271

**முகாமையாளர்**
**நிறுவனம்:** கல்யாணமாலை (இலவச திருமண சேவை)
**பதவி:** முகாமையாளர்
**பால்:** இருபாலாரும்
**வயதெல்லை:** 40 இற்கு மேல்.
அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- யாழ். நகரத்திற்கு அண்மையாக இருப்பவர்களுக்கு முன்னுரிமை

**தொடர்புகளுக்கு:** 076 097 3121

## வெளிநாட்டு வேலை வாய்ப்பு

**நிறுவனம்:** Woodmaninn Pub Management Ltd.
Family Choice Food Ltd., Cardiff, United Kingdom
**பதவிகள்:** தென்னிந்திய உணவுகள் மற்றும் இனிப்புகள் நிபுணத்துவத்துடன் சமையல்காரர். இலங்கை சமையல் நிபுணத்துவம் கொண்ட சமையல்காரர்.
ஊழியர்கள்
**விண்ணப்பிக்க வேண்டிய மின்னஞ்சல்:** woodmaninnrecruitment@gmail.com

**விற்பனையாளர்**
**நிறுவனம்:** யாழை அண்மித்த சிற்றுண்டிசாலைக்கு
**பணியிடம்:** யாழ்ப்பாணம்
**சம்பளம்:** 45,000/= (மதிய உணவு இல்லாமல்)
37,500/= (மதிய உணவுடன்)
வாரம் 1 நாள் விடுமுறை
**வயது:** 30 - 55
**தொடர்புகளுக்கு:** 077 247 3676

**அச்சக வேலைவாய்ப்பு**
**நிறுவனம்:** Printing Press
**பணியிடம்:** கொட்டஹேனா
**வேலை:** கைவேலை - பெண்களுக்கு வேலை வாய்ப்பு. (முன்னனுபவம் அவசியமில்லை
Binding வேலை - பெண்கள் தேவை. முன்னனுபவமில்லாத கைவேலை செய்யக்கூடியவர்களும்
**சம்பளம்:** சிறந்த சம்பளம்
**அனுகூலம்:** OT, EPF, ETF

# வேலை வாய்ப்பு

வரி விளம்பரங்கள்




முன்னனுபவமுள்ளவர்களுக்கும் முன்னுரிமை.
நிரந்தர வேலை வாய்ப்பு.
**தொடர்புகளுக்கு:** 077 2397390

**பணிப் பெண் தேவை**
**பணியிடம்:** யாழ்.நகர்
சிறிய குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப் பெண்
**சம்பளம்:** 64000.00
**தொடர்புகளுக்கு:** 075 988 1000, 075 498 5400, 077 937 0000

**மருத்துவம்**
**நிறுவனம்:** ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை
**பதவி:** சிறுநீரக விஷேட நிபுணர்
**தகைமைகள்** :கொழும்பு பல்கலைக் கழகத்தின் மருத்துவ பட்டப்பின் பட்ட நிறுவகத்திலிருந்து பெற்ற சிறுநீரகவியலில் MD சபை சான்றிதழுடன் அரசாங்க அல்லது வைத்தியசாலைகளில் பணியாற்றும் விஷேடத்துவ மருத்துவ அலுவலர்கள்.
**வயது:** 50 வயதிற்கு மேற்படாமலிருத்தல்
**சம்பள அளவுத்திட்டம்:** மாதாந்தம் 118,800 12 x 3645.00 - 162,540 ரூபா
**நியமன நியதிகள்:** நிரந்தரமானதும் ஊழியர்சேமலாப நிதியம்அடிப்படையிலும்.
**முடிவுத் திகதி:** 13.11.2023
**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:** தலைவர், ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை, தளபத்பிட்டிய, நுகேகொட.

**மருத்துவம்**
**நிறுவனம்:** ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலை
**பதவி:** CARDIOGRAPHER
**தகைமைகள்:** இலங்கை சுகாதார அமைச்சினால் நடத்தப்படும் கார்டியோகிராபர் பாடசாலையிலிருந்து பெற்றுக்கொண்ட டிப்ளோமா சான்றிதழ் அல்லது கார்டியோகிராபில் சமமான சான்றிதழ் அத்துடன் மூன்று (03) வருட அனுபவத்துடன் இலங்கை மருத்துவ சபையில் ஒரு கார்டியோகிராபராகப் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
வயது: 50 வயதிற்குச் குறைவானவர்
**சம்பளம்:** ரூபா 42105/-10x600-48,105/- அரச துறையினருக்கு வழங்கப்படும் மேலதிக கொடுப்பனவுகளும்சபையினால் அனுமதிக்கப்பட்ட மேலதிகக் கொடுப்பனவுகளும்
**விண்ணப்ப முடிவுத் திகதி :** 2023.11.13
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி : தலைவர்,ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலை, தலபத்பிட்டிய, நுகேகொடை.

**அரச வேலைவாய்ப்பு**

**நிறுவனம்:** மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபை
**பதவி:** பெறுகை அதிகாரி பதவி - தரம் II
**விண்ணப்ப முடிவுத் திகதி:** 2023-11-13
**மேலதிக விபரங்களுக்கு:** https://moj.gov.lk/images/SCCB/ Vacancy.pdf
முகவரி:மார்ஷல்,
மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி,
த.பெ.இல. 223, கொழும்பு - 12.
**தொடர்புகளுக்கு:** 011-2437501

**நிறுவனம்:** வெளிநாட்டு அலுவலகள் அமைச்சு
**பதவி:** நெறிமுறை உதவியாளர்
**விண்ணப்ப முடிவுத் திகதி :** 10.11.2023
**உத்தியோகபூர்வ இணையத்தளம்:** www.mfa.gov.lk
**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:**
செயலாளர்,
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
குடியரசுக் கட்டிடம், கொழும்பு-01

**பணியாளர்கள்**
**நிறுவனம்:** Romax Metals
**வேலை:** ஏற்றல், இறக்கல் மற்றும் கடை வேலையாளர்
**அனுகூலம்:** தங்குமிட வசதி
**தொடர்புகளுக்கு:** 0777369100

**கணக்கு நிர்வாக உத்தியோகத்தர்**
**நிறுவனம்:** Construction company
**வயது:** 30 வயதிற்குட்பட்டவர்
**பால்:** பெண்கள்
**தகைமை:**
• அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் அல்லது AAT தகுதி பெற்றவர்
• இதே திறனில் குறைந்தபட்சம் 3 வருட பணி அனுபவம்
• கணினி கல்வியறிவு மற்றும் QB இல் திறமையானவர்
**சுயவிபரக்கோவையை அனுப்பவேண்டிய மின்னஞ்சல்:** fairengserac@sltnet.lk
**தொடர்புகளுக்கு:** 0701477051

**விற்பனை நிர்வாகி**
**நிறுவனம்:** Light Box (pvt)Ltd.
**பணியிடம்:** கொழும்பு
**தகைமை:** • சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம்1வருட அனுபவம்தேவை.
• கணினி கல்வியறிவு மற்றும் வாடிக்கையாளர் உறவு திறன்.
• தீர்வுகளைக் கண்டறியும் திறன் மற்றும் அழுத்தத்தின் கீழ் வேலை.
**விண்ணப்ப முடிவுத் திகதி:** 10.11.2023
**முகவரி:** Light Box (pvt)Ltd, Colombo.
**சுயவிபரக் கோவையை அனுப்ப வேண்டிய whatsapp இல:** 0760971240
**மின்னஞ்சல்:** marketing@lightboxsl.com

குறைந்தபட்சம்1வருட அனுபவம்தேவை.
• கணினி கல்வியறிவு மற்றும் வாடிக்கையாளர் உறவு திறன்.
• தீர்வுகளைக் கண்டறியும் திறன் மற்றும் அழுத்தத்தின் கீழ் வேலை.
**விண்ணப்ப முடிவுத் திகதி:** 10.11.2023
**முகவரி:** Light Box (pvt)Ltd, Colombo.
**சுயவிபரக் கோவையை அனுப்ப வேண்டிய whatsapp இல:** 0760971240
**மின்னஞ்சல்:** marketing@lightboxsl.com

**நிறுவனம்:** MASCONS AGRO TECH LTD
**பணியிடம்:** கொழும்பு ஏற்றுமதி விற்பனை நிர்வாகி
1) பூக்களுக்கு வெளிநாட்டில் புதிய வாடிக்கையாளர்களையும் புதிய சந்தைகளையும் கண்டறிதல். 2) ஏற்றுமதி செயல்முறையைத் தொடங்குதல் மற்றும் புதிய வணிகங்களை உருவாக்குதல். 3) விற்பனை விதிமுறைகளை பேசி விற்பனை இலக்கை அடையுங்கள். 4) விற்பனையை மேம்படுத்த சர்வதேச வாடிக்கையாளர்களுடன் நல்ல வணிக உறவுகளை நிர்வகிக்கவும். 5) பண்ணையில் இருந்து சர்வதேச வாடிக்கையாளர் வரை ஏற்றுமதிகளை நிர்வகித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.
**தகைமை:** 1) விற்பனை/ஏற்றுமதி, விற்பனை/சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் இளங் கலை பட்டம் அல்லது தொழில் முறை தகுதி. 2) ஏற்றுமதி சார்ந்த நிறுவனத்தில் 5 வருட அனுபவம். 3) ஆங்கிலத்தில் பேசுதல் மற்றும் எழுது தல் ஆகிய இரண்டிலும் சிறந்த புலமை.
**முகவரி:** Mascons AGRO TECH (LTD), இல-175, ஸ்ரீ சுமனதிஸ்ஸ மாவத்தை, கொழும்பு -12. **தொலைபேசி:** 011 2388263/ 011 7204444 **தொலைநகல்:** +94 11 2449537
**மின்னஞ்சல் :** mascons@eureka.lk.
**இணையம்:** www.mascons-agro.com

தமிழர் பொருண்மியம் வாரமலர்
TAMILS ECONOMY

# தமிழர் பொருண்மியம் வார இதழினை பெற்றுக் கொள்ளக்கூடிய இடங்கள் பற்றிய விவரங்கள்

| | |
|---|---|
| யாழ்முற்றம் | - கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் |
| வி.செல்லத்துரை ஸ்ரோர் | - நல்லூர் தெற்கு, நல்லூர் |
| மஞ்சு களஞ்சியம் | - நாவலர் றோட், யாழ்ப்பாணம் |
| ஹரிகிருஷ்ணா | - கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் |
| சிவானந்தா கபே | - இல - 648, பருத்தித்துறைவீதி, நல்லூர் |
| ஏ.ஆர்.கே. Shop | - பருத்தித்துறை வீதி, மூன்றாம்கட்டை, கல்வியங்காடு |
| நகுலன் | - இல - 85, பருத்தித்துறைவீதி, நல்லூர் |
| இனியா தென்றல் புத்தகக் கடை | - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் |
| நாதன் கபே | - நாவலர் வீதி, நல்லூர் |
| ஆசீர்வணிகம் | - கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் |
| உமா ஸ்ரோர் | - கே.கே.எஸ். வீதி, சிவன்கோவில், யாழ்ப்பாணம் |
| சிறிமகாமாரி | - கே.கே.எஸ். வீதி, இணுவில், யாழ்ப்பாணம் |
| வானம்பாடி | - சுழிபுரம் |
| வெண்பா புத்தகக் கடை | - யாழ். இந்துக் கல்லூரி அருகில் |
| பூபாலசிங்கம் புத்தகக் கடை | - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் |
| Book Lap | - யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் முன்பாக |
| ஜெகன் களஞ்சியம் | - இல - 447, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் |
| சிறி துர்க்கா பல்பொருள் வாணிபம் | - கே.கே.எஸ். வீதி, தெல்லிப்பளை |
| சஜீவன் பல்பொருள் வாணிபம் | - பிரதான வீதி, பண்டத்தரிப்பு |
| பிள்ளையார் ஸ்ரோர் | - மட்டுவில் மத்தி, சாவகச்சேரி |
| நியூ கஜானன் | - அல்லாரை வீதி, மீசாலை, சாவகச்சேரி |
| அருள்ளம்மா | - இல - 505, பீச்றோட், குருநகர், யாழ்ப்பாணம் |